# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. II Issue 7 October 2012

இம்மாத மலரில். . . .

பொருளடக்கம்

பக்கம்


லைப் டிவைன் ..... 2

இம்மாதச் செய்தி ..... 14

யோக வாழ்க்கை விளக்கம் VI ..... 15

சாவித்ரி ..... 20

அஜெண்டா ..... 22

பூரணயோகம் - முதல் வாயில்கள் ..... 25

நான் என்ன செய்யட்டும் சொல்லுங்கோ? ..... 28

அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும் ..... 50

ஸ்ரீ அரவிந்தமும் மரபும் ..... 57

Infinityயினுடைய ஆற்றல் (பாகம் 2) ... 60


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

**தெரியாததில்லை. தெரிந்து கொள்ளப் பிரியப்படாத-துண்டு.**

**நல்லவராக நடித்தாலும் அதற்கும் தவறாது பலனுண்டு.**

**ஒரு சிறு மனிதனிலாவது ஒரு பெரிய குணத்தைக் காணா-தவன் பெரிய ஆத்மாவாக இருக்க முடியாது.**

**வேண்டியது முடியவில்லை மற்றும் கிடைக்கவில்லை என்றால் வேண்டாதது பிடிக்கும் எனப் பொருள்.**

**உரிமை உள்ளவனுக்கு கேட்காமல் கொடுக்க வேண்டும். உரிமை இல்லாத-வனுக்குக் கேட்டாலும் கொடுக்கக் கூடாது.**

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XXIII. The Double Soul In Man

Ours is an embodied existence *Page 229*
It expresses the world's dynamism. *Para 13*
The other term is the status of spirit.
They are apparently opposites.
It is only because of Ignorance.
A harmony between them must be established.
The manifested Being has two terms.
They are divided and opposed.
There is the supramental consciousness-energy.
That alone can establish a perfect harmony between them.
Nature has a centre for its order of the psychological movements.
It is the secret spiritual-self.
In the ignorance Nature does not centre there.
It does so in its substitute.



## 23. மனிதனுள் இரட்டை ஆத்மா

ஆன்மா உடலை ஏற்ற வாழ்வு நம்முடையது.
உலகம் இயங்குவதை நம் உடல் அனுமதிக்கிறது.
இரு நிலைகள் மற்றது ஆன்மாவின் அந்தஸ்து.
அவை எதிராகத் தோன்றுகின்றன.
இது அறியாமையால் ஏற்படுவது.
இவற்றிடையே சுமுகம் வேண்டும்.
சிருஷ்டிக்கும் இரு நிலைகள் உள்ளன.
அவை பிரிந்து எதிரானவை.
சத்திய ஜீவிய சக்தியுண்டு.
அதுவே இவற்றிடையே சிறப்பான சுமுகமேற்படுத்த முடியும்.

இயற்கையின் உள்ளுணர்வு ஒழுங்கு பெறும் மையமுண்டு.

அம்மையம் இரகஸ்யமான ஆன்மாவான பிரம்மம்.
அஞ்ஞானத்தில் இயற்கை அம்மையத்தை நாடுவதில்லை.
அதற்குப் பதிலாக ஏற்பட்ட இடத்தை இயற்கை நாடுகிறது.

It is the principle of ego.
The world we live in is full of several things.
They are complex contacts, contradictions, dualities, incoherence.
We need a rock of safety.
The ego supplies this.
Against the cosmic and infinite we need a defence.
We need a spiritual change.
There this defence must be given up.
Ego has to vanish.
It is the person.
The person finds dissolved into a vast impersonality.
We need an ordered dynamism of action.
This is impersonality.
There is no key for order.
There is a usual result.
One is divided into two parts of being.
One is the spiritual within.
The other is the natural without.
The inner has perfect freedom.
In it is seated the divine realisation.
The natural part goes on with the old action of Nature.
It continues the mechanical movements.
It is of the past energies.
It is her already transmitted impulse.
All within may be luminous with the Self.



அது அகங்காரம், அகந்தை, ஆணவம், “நான்” எனப்படும்.
நாம் வாழும் உலகம் பலவற்றால் நிறைந்தது.
அவை சிக்கலான தொடர்புகள், பிணக்குகள், இரட்டைகள், பொருத்தமற்றவை.
நமக்கு மலைபோன்ற பாதுகாப்புத் தேவை.
அகந்தை அந்தச் சேவையை நமக்குச் செய்கிறது.
பிரபஞ்சம், அனந்தமிடமிருந்து நமக்குப் பாதுகாப்பு வேண்டும்.
நாம் தேடுவது ஆன்மீக மாற்றம்.
அங்கு இந்தப் பாதுகாப்புத் தேவையில்லை.
அகந்தை அழிய வேண்டும்.
அகந்தை தனி மனிதன்.
பரந்த பொது வாழ்வில் அகந்தை கரைந்து மறைகிறது.
நமக்கு முறையாகச் செயல்படும் ஒழுங்கு வேண்டும்.
இது பொது லோகம்.
ஒழுங்கைக் காணும் அறிகுறியில்லை.
வழக்கமான பலன் உண்டு.
மனிதனை இரு பாகங்களாகப் பிரிக்கின்றனர்.
ஒன்று உள்ளேயுள்ள ஆன்மீக பாகம்.
மற்றது புறத்திலுள்ள இயற்கைக்குரிய பகுதி.
அகத்திலுள்ளதற்குப் பூரண சுதந்திரம் உண்டு.
அதனுள் தெய்வீக சித்தி உறைகிறது.
இயற்கைக்குரியது பழைய பழக்கத்தைத் தொடர்கிறது.

பழைய வழக்கமான பழக்கங்களைத் தொடர்கிறது.
அவை பழைய பழக்கம்.
ஏற்கனவே நாம் ஏற்றுக்கொண்டவை.
அகம் ஆத்ம ஜோதியால் மிளிரலாம்.

There may be an entire dissolution of the limited person.
The ego-centric order may dissolve.
The outer may become the field of an apparent incoherence.
Thus we may become outwardly inert and inactive.
We are moved by circumstances and forces.
Not self-mobile.
Though consciousness may be enlightened inside.
Or as a child with plenary self-knowledge.
Or as one inconsequent in thought and impulse.

There will be utter calm and serenity within.
Or be a wild and disordered soul.
Though there is purity and poise of the spirit inside.
There may be ordered dynamism in the order nature.
It may be a continuation of the superficial ego-action.
But it may not have been accepted inside.
Or a mental dynamism that cannot be perfectly expressive of the inner spiritual realisation.
There is no equipollence between action of mind and the status of spirit.
There may be intuitive guidance of Light from within.
Its dynamism of action must be imperfect.
Its nature of its expression will be imperfect.



சிறிய அகந்தை முழுவதும் கரையலாம்.

அகந்தையின் அதிகாரம் அழியலாம்.
புற ஒழுங்கு அழிந்து பொருந்தாத நிலையையடையலாம்.

புறத்தில் செயலற்று ஜடமாகிறோம்.
சந்தர்ப்பத்தாலும் சக்திகளாலும் நாம் உந்தப்படுகிறோம்.
நாமே இயங்க முடிவதில்லை.
அகத்தில் ஜீவியம் ஒளி வீசலாம் (ஜடவாதம்).
குழந்தைபோல் அகன்ற ஆத்ம ஞானம் பெறலாம் (பாலவாதம்).
அல்லது முன்னுக்குப் பின் முரணான எண்ணமும் செயலும் உடையனவாயிருக்கலாம்.
உள்ளே பெரு அமைதியும் தெளிவுமிருக்கலாம் (உன்மத்த வாதம்).
தாறுமாறான தீவிர ஆத்மாவாகலாம் (பிசாசவாதம்).
உள்ளே தூய்மையும் அமைதியும் இருக்கலாம்.
வெளி சுபாவம் ஒழுங்கான தீவிரம் உள்ளதாக இருக்கலாம்.
அது புறத்தில் அகந்தையின் செயலாக மேலெழுந்தவாரியாக அமையலாம்.
அதை அகம் ஏற்காமலிருக்கலாம்.
அது அகத்தில் ஆன்மீகச் சித்தியை தெளிவாக வெளிப்படுத்தாத மனத்தின் தீவிரமாக இருக்கலாம்.
ஆத்மா நிலைக்கும் மனதின் செயலுக்குமிடையே சக்தி சமமாக இல்லை.
உள்ளிருந்து ஜோதியின் நேரடி ஞானம் வழி நடத்தலாம்.

அதன் செயலின் தீவிரம் குறையுடையதாக இருக்கும்.
அதன் இயற்கை வெளிப்பாடு குறையுடையதாக இருக்கும்.

They are the imperfections of mind, life and body.
It is like a King with incapable ministers.
It is a knowledge expressed in the values of Ignorance.
We need harmony of outer and inner Spirit.
It can be done by the descent of Supermind.
It has the perfect unity of Truth-Knowledge and Truth-Will.
It can establish it.
The values of Ignorance must be changed into the values of knowledge.
It alone can do it.

Fulfillment of our psychic being is the aim. ***Page 230 Para 14***
The same as in the consummation of life and mind.
The rule is to relate it to the divine source.
The rule is to relate to the corresponding truth.
That truth is in the Supreme Reality.
That is the indispensable movement.
Here too as there.
It is by the power of Supermind.
It can be done.
Done in integral completeness.
We reach an intimacy there.
It becomes an authentic identity.
The One Existence has two hemispheres.



அவை மனம், வாழ்வு, உடலின் குறையாகும்.
திறமையற்ற மந்திரிகளைக் கொண்ட அரசன் போலிருக்கும்.
அறிவை அறியாமை மூலம் வெளிப்படுத்துவது போலாகும்.

அகம், புறம் ஆத்ம சுமுகம் பெற வேண்டும்.
சத்திய ஜீவியம் வருவதால் அது முடியும்.
சத்திய ஞானமும் சத்திய உறுதியும் பூரணமாக இணைந்த நிலை அதனுடையது.
அதனால் முடியும்.
அறியாமையின் செயலை அறிவின் செயலாக மாற்ற வேண்டும்.

சத்திய ஜீவியம் மட்டும் இதைச் செய்ய முடியும்.

சைத்திய புருஷன் பூரணம் பெறுவது குறிக்கோள்.

மனமும் வாழ்வும் பூர்த்தியானது இதே சட்டப்படிதான்.
சட்டம் ஒன்றே. தெய்வீக மூலத்தைத் தொடுவதே சட்டம்.
இதற்குரிய சத்தியத்துடன் இணைவது சட்டம்.
அந்தச் சத்தியம் உயர்ந்த சத்தியத்தில் உள்ளது.
தவிர்க்க முடியாத கட்டம் அது.
இங்கும் அங்கும் சட்டம் ஒன்றே.
நடப்பது சத்திய ஜீவிய சக்தியால்.
அதைச் சாதிக்கலாம்.
இணைந்து நிற்கும் பூரணமாகலாம்.
ஒரு நெருக்கம் வரும்.
நெருக்கம் ஐக்கியமாகும் - உள்ளதை உணர்த்தும் ஐக்கியம்.
ஏகனுக்கு இரு லோகங்கள் உண்டு.

They are the higher and the lower ones.
It is the Supermind that links the two.
In Supermind is the integrating Light.
It is the consummating Force.
It is the wide entry into the supreme Ananda.
The psychic being is uplifted by that Light and Force.
It can unite itself with the original Delight of existence.
It came from there.
It overcomes the dualistic pain and pleasure.
Mind, life and body are delivered from all fear and shrinking.
It can recast the contacts.
They are the contacts of existence in the world.
They are cast into terms of Divine Ananda.

## Ideas in each Para:

1) Life rises from dumb material to original delight through desire and Love.
2) Delight is the secret, it is its motive and object.

3) Delight must be achieved in the action of the universal.
4) The larger truer psychic soul should come to the surface.
5) The larger individuality is in the subliminal. It must emerge.



அவை உயர்ந்தது, தாழ்ந்தது எனப்படும்.
இரண்டையும் இணைப்பது சத்திய ஜீவியம்.
சத்திய ஜீவியத்தில் இணைக்கும் ஜோதியுள்ளது.
அதுவே பூரணம் தரும் சக்தி.
வளரும் அனந்தமான உயர்ந்த ஆனந்த லோக வாயில் அது.
அந்த ஜோதி சக்தி சைத்திய புருஷனை உயர்த்துகிறது.

மூலமான பிரம்மத்திற்குரிய ஆனந்தத்துடன் அது இணையும்.

அங்கிருந்து எழுந்ததுவே அவ்வானந்தம்.
வலி, சந்தோஷம் இரட்டை மாறுதல்களைக் கடக்கும்.
பயம், சுருக்கத்தினின்று மனம், உயிர், உடலை விடுவிக்கும்.

தொடர்புகளைப் புதிய அச்சில் வார்க்கும்.
அவை உலகில் ஆன்மீக வாழ்வின் தொடர்புகள்.
அவை தெய்வீக ஆனந்த ரூபங்களாக வார்த்தெடுக்கப்படும்.

## ஒவ்வொரு பாராவிலும் உள்ள கருத்துகள்:

1) இருண்ட ஜடத்திலிருந்து வாழ்வு ஆசை, அன்பு மூலம் ஆனந்தத்தை அடைகிறது.
2) ஆனந்தம் இரகஸ்யம், ஆனந்தம் நோக்கம், ஆனந்தம் இலட்சியம்.
3) பிரபஞ்ச வாழ்வில் ஆனந்தம் பெற வேண்டும்.
4) பரந்த உண்மையான சைத்திய புருஷன் மேலே வர வேண்டும்.
5) பரந்த அடிமன தனித்தன்மை வெளிவர வேண்டும்.

6) The cosmic delight is dwarfed and distorted by the ego that shuts it out from being fully enjoyed.
7) The desire soul distorts the pure Delight into pleasure, pain and indifferences.
8) The desire soul left to itself will be moving in the same grooves.
9) Impersonality overcomes the difficulty of ego.
10) The secret psychic Person, the true soul, the real conscience, coming out to the surface.

11) The Psychic, behind the heart, of the size of the thumb is of the Self. Still more is possible.
12) The psychic is lifted into the supermind where division of Mind disappears.
13) The disharmony created by Mind can only be removed by the descent of supermind.
14) Values of Mind are cast into terms of the Divine Ananda.

*Contd....*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***அன்னையை நினைப்பவன் பக்தன்.***
***அன்னையை மட்டும் நினைப்பவன் சாதகன்.***
***அன்னையைத் தவிர வேறெதையும் நினைக்க முடியாதவன் சத்திய ஜீவியத்தை நோக்கிப் போகின்றவன்.***



6) பிரபஞ்ச ஆனந்தம் சுருங்கிச் சிதறி அகந்தையால் தடை செய்யப்படுகிறது.
7) ஆசை ஆனந்தத்தை வலி, பாராமுகமாக மாற்றுகிறது.

8) ஆசை செய்ததையே செய்யும்.

9) அகந்தையின் சிரமத்தைப் பொதுத்தன்மை கடக்கும்.
10) இரகஸ்ய சைத்திய புருஷன், உண்மை ஆத்மா, உண்மையான மனசாட்சி, மேலே வருவது வெற்றி. இது ஆன்மீக வாழ்வுக்கு உயர்வது.
11) கட்டை விரல் பரிமாணமான சைத்திய புருஷன் பிரம்மம்.

12) மனத்தின் பிரிவினை சத்திய ஜீவியத்தில் கரைகிறது.

13) மனம் ஏற்படுத்திய பிணக்கு சத்திய ஜீவியம் வருவதால் அழியும்.

14) மனத்தின் பண்பு, தெய்வீக ஆனந்தப் பண்பாகிறது.

*தொடரும்......*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***க்ஷணம் தவறாத சமர்ப்பணம் அன்னை தரிசனம்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***ஆபத்தில் அன்னை நினைவு வருவது அருள்.***

*இம்மாதச் செய்தி*

**தன்னை அறிந்தவன்**

**பிறரை அறிவான்.**



# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**II/72) மனம் ஆரம்பத்தை இழக்க வேண்டுமெனில் அது மௌனத்தால் நிரம்பியும் அதன் அமைப்பை இழந்தும் நிற்க வேண்டும். அந்நிலையில் சக்தி (the force) மௌனத்தைச் சந்தித்து அதில் கரைந்துவிடும்.**

☆ **மௌனம் நிறைந்த மனம் சக்தியில் கரையும்.**

- எல்லோரும் மனத்தை அறிவோம்.
- அது என்ன, எப்படிச் செயல்படுகிறது என அறியோம்.
- அனைவரும் பேசுகிறோம்.
- பேசக் குரல் வேண்டும். குரலின் சக்தியால் பேச்சு எழுகிறது, கேட்கிறது.
- பேச்சுக்கு அமைப்புண்டு (construction).
- சுவர்கள் வீட்டின் அமைப்பு.
- வீட்டை அறைகளாகத் தடுப்பது, எல்லையை நிர்ணயிப்பது சுவர்கள்.
- சுவர்களில்லாமல் வீடு கட்ட முடியாது.
- சுவர்களை அதனால் வீட்டின் அமைப்பு என்கிறோம்.
- சட்டையின் அமைப்பு வெட்டிய இடங்களின் தையல்.
- தையலின்றி, வெட்டாமல் சட்டையில்லை.
- வீதிகள் ஊரின் அமைப்பு.
- அவைபோல் பேச்சுக்குச் சொற்கள் அமைப்பாக இருக்கின்றன.
- சொற்களின்றிப் பேச்சில்லை.

- அதேபோல் எண்ணங்கள் மனத்தின் அமைப்பு.
- ஒரு ஊரை இடித்து அகற்றி புது ஊர் கட்ட வேண்டும் என்றால் வீடுகளை இடிக்க வேண்டும், வீதிகளை மூட வேண்டும்.
- வீடுகட்கு அஸ்திவாரம் உண்டு.
- ஆயிரம் ஆண்டுகட்குப் பின்னும் தோண்டி எடுத்தால் அஸ்திவாரம் தெரியும்.
- களிமண் பானையைச் சூளையில் சுட்டுவிட்டால் மீண்டும் களி மண்ணாகாது.
- சுடாத பானையை நீரில் மூழ்கி ஊற வைத்தால் பானை கரைந்துவிடும்.
- சூளை சுடுவதால் பானையின் அமைப்பு உருவாகிறது.
- சுடாத பானையின் அமைப்பு கரையக்கூடியது.
- மனத்தின் அமைப்பு எண்ணம்.
- எண்ணம் மாறக்கூடியது.
- எண்ணம் உணர்வு பெற்று நம்பிக்கையானால், எண்ணம் அமைப்பு பெறும்.
- மனத்தின் பொருளில் அந்த அமைப்புக்கு அஸ்திவாரம் விழும்.
- மௌனம் நிறைந்தால் (saturate) எண்ணம் கரையும்.
- எண்ணம் கரைவதால் அதன் அஸ்திவாரம் கரையாது.
- மௌனம் மனத்தின் பொருளை நிரப்பினால் அஸ்திவாரமும் கரையும்.
- பொதுவாக மௌனி, சாது என்பவர் பேசமாட்டார்.
- பேசாதவர் மனத்தில் பேசிக் கொண்டிருப்பார்.
- அவர் பேசுவதை நிறுத்தினால் எண்ணம் எழுந்து பேசும்.
- எண்ணத்தை நம்பாவிட்டால், நம்பிச் செயல்படாவிட்டால் எண்ணம் மௌனத்தால் கரையும்.



- எண்ணம் உணர்வால் நம்பிக்கையாகி இருப்பதால் அப்பொழுதும் அஸ்திவாரம் கரையாது.
- எண்ணத்தைச் செயலுக்கு நம்புகிறோம். அதைக் கடந்து எண்ணத்தை எண்ணமாக நம்புகிறோம்.
- அது கரைய மௌனம் மனத்தின் பொருளை நிரப்ப வேண்டும்.
- ஆரம்பம் (initiative) என்பது எண்ணத்தையும் நம்பிக்கையையும் பொறுத்தது.
- அதை இழப்பது அகந்தை கரைவது.

✲✲✲

**II/73) ஆரம்பத்தை இழக்கும் நிலையை மௌனம் ஏற்படுத்தும். ஆனால் சக்தியைச் சைத்திய புருஷனிடம் அனுப்ப அதனால் இயலாது. அது சமர்ப்பணம், ஆர்வத்தால் பூர்த்தியாவது.**

☆ **ஆரம்பத்தை இழந்த பின்னும் சமர்ப்பணம் தேவை.**

- மனிதனுடைய சரணாகதி பூர்த்தியான பின்னும், கருவி, வேலையைச் செய்பவன் (instrument, worker) இருக்கும் என்கிறார் பகவான்.
- வீட்டை இடித்து அப்புறப்படுத்திய பின் அஸ்திவாரம் பூமியிலிருக்கும்.
- நான் எனும் முனைப்பு அகந்தை, கருவி, வேலைக்குரியவன் என்ற உருவில் இருக்கும்.
- ஆங்கிலேயன் போனபின் ஆங்கிலேய ஆபீசர்களிருந்தனர்.
- அதுவும் போனபின் இன்றுவரை அவன் நிர்வாகம் இருக்கிறது.
- ஒரு அமைப்பு மாறும் பொழுது பெரும்பாலும் மாறும், அனைத்தும்

மாறாது.

- திருவுருமாற்றம் பொறாமையைப் பேருதவியாக்குவதால் அடியில் தங்க எதுவுமில்லை.
- (Initiative) ஆரம்பம் என்பது யுகம் யுகமாக நம்முள் தயாரானது.
- சக்தி உடலிலும், உயிரிலும், மனத்திலும் சேர்கிறது.
- சேர்ந்தது முழுமையானால் (saturated) அதற்கு முனைப்பு எழும்.
- முனைப்புக்கு முழு உருவம் தருவது ஆரம்பம்.
- இளைஞர்கள் ஓர் ஊரில் எது செய்ய ஆரம்பித்தாலும், பெரியவர்கள் எதையும் மாற்றாதே, எதையும் புதியதாக ஆரம்பிக்காதே எனக் கூறுவார்கள்.
- புதியன செய்தல் புரட்சி செய்தல்.
- காசு சம்பாதித்தவனால் சும்மாயிருக்க முடியாது, கல்யாணம் செய்வான், அதிகப் பணமிருந்தால் வீடு கட்டுவான், ஏராளமாக இருந்தால், எலக்ஷனில் நிற்பான்.
- அணு ஆயுதங்களைப் பற்றி அன்னை பேசியபொழுது அவையிருந்தால் உபயோகப்படுத்தும்படி தூண்டும் என்றார்.
- நாலு பேர் பேசும் விஷயத்தில் நமக்குப் படிப்பு, தெளிவு இருந்தால், அவர்கள் அறியாததை நாம் கூற விரும்புவோம்.
- அதைத் தடை செய்வது இயலாத காரியம்.
- அப்படி ஒருவர் வென்றால், அந்த எண்ணம் பசுமையாக ஜீவனோடு எந்த நேரமும் மனதிலிருக்கும்.
- மேடைப் பேச்சாகவோ, கட்டுரையாகவோ, பிறரிடமோ அது வெளிவரத் துடிக்கும்.
- சமர்ப்பணத்தின் சிறப்பை அறிய அதுபோன்ற உந்துதலை சமர்ப்பணம் செய்து பார்ப்பது தெரிவிக்கும்.



- மௌனம் மகத்தானது.
- பெரும்பாலும் தானே மேலிருந்து நம்முள் வருவது.
- மௌனம் குடிகொண்டால் ஆரம்பம் முனை மழுங்கும்.
- மௌனம் கலைந்தபின், மீண்டும் வெளிவர முயலும்.
- ஆரம்பத்தின் அஸ்திவாரத்தை மௌனத்தின் ஆழம் தொட்டால், ஆரம்பம் கரைவது தெரியும்.
- கரையாத ஆரம்பம் இருக்கும்வரை சமர்ப்பணம் தேவை.
- விக்காம் போக்கடா என்று டார்சி கடிதம் கூறியதை எலிசபெத் ஏற்றாள்.
- ஏற்றவுடன் அவன்மீது இருந்த ஆசை, ஆர்வம், பரிவு அப்படியே மறந்துவிட்டது.
- அவனை மனம் மறந்துவிட்டது.
- உணர்வு மனத்தைவிட ஆழத்திலிருப்பது.
- உணர்வு அறிவை ஏற்காது.
- லிடியாவால் குடும்பத்தைச் சர்வ நாசம் செய்த பின்னும் அவன் மீது அவளுக்கு அனுதாபமிருந்தது.
- தன் சிறுவாட்டுக் காசிலிருந்து அவனுக்காக லிடியாவுக்குத் தவறாது பணம் அனுப்புவாள்.
- மரத்தை வெட்டியபின் அடிமரம் நிற்கும்.
- அதையும் வெட்டி எடுத்தபின் ஆணிவேர் ஆழ்ந்திருக்கும்.
- கிளைகளை வெட்டியதால் மரம் அழிந்தது உண்மையானாலும், மரம் உற்பத்தியான வரலாற்றைக் கருதினால், கிளைகள், அடிமரம், ஆணிவேர் என ஒன்றன்கீழ் ஒன்றாக அடுத்த அடுத்த நிலைகள் ஏற்படும்.

*தொடரும்....*

❋❋❋

## P.143 As if a stranger or enemy at its door

### முகம் தெரியாத மனிதன், எதிரி வாயில் வந்து

☆ அதிர்ச்சி பெற்ற புலன்கள் அனுமதித்த எண்ணங்கள்

☆ ரூபத்தின் ஜீவனை இழந்த அவ்வெண்ணங்கள்

☆ கண்டதை விண்டுணராத விநோத இதயம்

☆ செயலைக் கண்டும் அதன் திறனையறியாத

☆ நிகழ்ச்சிகள் உணர்த்தும் நித்தியத்தைத் தவறவிடும்

☆ அதன் பொருளென்ன என்று அறிய முயலாத நிலை

☆ மனித ரூபம் பெற்ற ஜீவன்கள் நிறைந்த இடம்

☆ நேரம் கண்ட வேகத்துள் முழுதும் இழந்த பெருநிலை

☆ என்னவென்று அறியாத, ஏன் வாழ்கிறோம் என்றுணராத

☆ இயற்கை தரும் இன்பம் எழில் தரும் முடிவென

☆ புறம் தரும் புலனுணர்வு புலப்படும் நிலை

☆ உடல் பெற்றதே உலகம் பெற்றதாக உணரும் பாங்கு

☆ உணர்ந்து, செயல்பட்டு, புலனாலறிந்து, புலப்படுவது தவிர வேறில்லை

☆ ஆத்மாவின் புற ஆடையுடன் ஐக்கியமாகி

☆ ஆழ்ந்து ஒளிந்துள்ள அறிவு கண்டுகொள்ளும்

☆ அகக் கண்ணை அவன் மீதே பொருத்த மறுத்து

☆ நாடகக் கர்த்தாவை தேடி மறுத்து

☆ கண்டது மேடை, கண்ணில் பட்டது நாடகம்



☆ ஆழ்ந்து உணரும் ஆராய்ச்சியுணர்வில்லை

☆ சிந்தனை எழுந்து சிறக்கும் சிரமத்தை ஏற்கவில்லை

☆ இயற்கையைக் கண்ட மனம் ஏதும் அறியவில்லை

☆ வரத்தைப் போற்றி, வலியெழ அடித்ததைக் கண்டு பயந்து

☆ அவள் சட்டத்தின் மந்திர யுக்தியை மனதில் கொள்ளவில்லை

☆ சத்தியம் ஊறும் ஊற்றைக் காணத் துடிக்க மறுத்து

☆ ஏராளமான தகவலை தஸ்தாவேஜாக்கி

☆ தெளிவான நூலிழை கோர்க்கும் உணர்ச்சி மணிகள்

☆ வேட்டையாடி, விரைந்து சென்று, நுகர்ந்து பார்த்து

☆ ஒளியிலும், ஓடும் காற்றிலும் ஒடுங்கி நிற்கும் தமஸ்

☆ உலகோடு இணைந்து மறையும் ஸ்பர்சத்தை நாடி

☆ மேல் மன உணர்வை மேலோடு திருப்தி செய்து

☆ இவை வாழ்வின் துடிப்பை மேலோடு தொட்டு

☆ மறைவிலுள்ள ஆத்மாவின் ஸ்பர்சத்தை அறியாமல்

☆ உள்ள ரூபத்தை வெளி ரூபத்தின்று காப்பாற்ற

☆ பிழைத்தெழுந்து அனுபவிப்பதே நோக்கம்

☆ குறுகிய வாழ்வின் குட்டை நாட்கள் நிரம்பின

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

*நடந்தவை எல்லாம் நல்லது என்பவருக்கு*
*நல்லது மட்டுமே நடக்கும்.*

## P.169 Medicines cure you of one thing and give you another *(Volume VI)*

## மருந்து ஒரு வியாதியைக் குணப்படுத்தி அடுத்ததைத் தரும்

- குறையை முறையால் நிவர்த்தி செய்வது மருந்து.
- மந்திரம் குறையை நிறைவால் நிறைவு செய்கிறது.
- மணி, மந்திரம், ஒளஷதம் எனப் பெயர்.
- நிலத்தை விற்று வீடு கட்டினால் சொத்து மதிப்பு மாறாது.
- ஹாலந்தில் ஆஸ்பத்திரிக்குப் போகக்கூடாது, போனால் வெளிவர முடியாது என்றொரு நம்பிக்கை. இது அனுபவத்தால் வந்தது.
- மருந்து ஒரு உபாயம். வியாதியைக் குணப்படுத்த சக்தி வேண்டும். மருந்திற்கு அந்தச் சக்தியில்லை. எனவே உடலின் பொதுவான சக்தியைக் கொண்டு ஒரு வியாதியை மருந்து குணப்படுத்துகிறது. அதனால் அந்த இடம் குறைவுபட்டு வியாதி வருகிறது.
- ஆன்மீக முறைக்கு இக்குறை வாராது. ஏனெனில் ஆன்மா புது சக்தியை அளித்து வியாதியைக் குணப்படுத்துகிறது.
- அன்னைக்குப் பிரார்த்தனை செய்வதால் தீரும் பிரச்சனைகள் மேலும் ஒரு வாய்ப்பைக் கொண்டு வருவதைக் காணலாம்.
- தூங்க முடியவில்லை என்பது ஒரு வியாதி. இதற்குப் பல்வேறு உபாயங்கள் உள. எதுவும் முழுப் பலன் தாராது.
- இரவில் தூங்க முடியாமல் பகலில் தூங்குவார்கள்.



- இப்படிப்பட்டவர்க்கு, அன்னையை அதிகமாக அறியும் வாய்ப்புண்டு. இதனால் தூக்கம் போகும் என நிச்சயமாகக் கூற முடியாது.
- அன்னையின் அளவில்லாத சக்தியை அன்பர் நம்பினாலும், அதை உள்ளபடி அறிவதில்லை.
- ஒரு குழந்தை ஓர் அமெரிக்க சாக்லேட் சாப்பிட்டுவிட்டு மறுநாளும் அது வேண்டும் என விரும்பி அன்னையிடம் 1 மணிக்குச் சொல்லிற்று. மாலை 6½ மணிக்கு அமெரிக்காவிலிருந்து வந்தவர் அதே சாக்லேட்டை அக்குழந்தைக்குத் தந்தார்.
- இது கேட்டுக் கிடைத்தது. கேளாமல் கிடைப்பது அபரிமிதம்.
- நெடுநாளாக இரவில் தூங்க முடியாதவர் பகலில் வேலை செய்ய முடியாமல் தூங்குகிறார்.
- அப்படி ஒரு நாள் இரவு தூங்கவேயில்லை என்றபின், அன்னையைத் தொடர்ந்து அழைக்க முடிவு செய்தார். பகல் முழுவதும் தெம்பாக வேலை செய்ய முடிந்தது. இரு இரவுகள், மூன்று இரவு தூங்காமலிருந்தாலும் அழைப்பு நாலாம் நாள் போதிய தெம்பு தரும்.
- கேட்டுப் பெற்றது 8 ஆண்டில் 100 ஏக்கர். கேளாமல் பெற்றது 3 மணி நேரத்தில் 200 ஏக்கர். கேட்டால் நிச்சயம் கிடைக்கும். கேளாவிட்டால் ஆரம்பத்திலேயே அபரிமிதமாகக் கிடைக்கும்.
- கேட்டோ, கேளாமலோ அன்னையிடமிருந்து பெற விரும்பாத மனநிலைக்கு யோகம் பலனாகக் கிடைக்கும்.
- திரௌபதி கேட்டுப் பெற்றது மானத்தைக் காப்பாற்றியது.
- பகவான் கேளாமல் பெற்றது சத்திய ஜீவியம்.
- சண்டையும் பூசலுமான தம்பதிகள் கேட்டுச் சுமுகம் பெறலாம்.
- கேளாமல் அன்பையும், பிரியத்தையும் பெறலாம்.

- ✲ கேளாமல் பெறுவது Silent Will மௌன சக்தி.
- ✲ வியாதியைக் கேட்டும் குணப்படுத்தலாம், கேளாமலும் குணப்படுத்தலாம்.
- ✲ குணம் வேண்டியவர் கேட்கலாம், அருள் வேண்டியவர் கேட்கக்கூடாது.

❋❋❋

**ஜீவிய மணி**

**அன்னையை ஏற்றால் அனைவரும் ஏற்பர்.**

**நிகழ்ச்சிகளை நினைப்பது அன்னையை மறப்பதாகும்.**

**கிடைக்காது என்பதால் கிடைத்த பக்குவம்.**

**வெளிப்படாத சொல் வேகமுடையது.**

**கடந்தது காரமாகத் திரும்பி வரும்.**

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***அன்னையை நினைக்கப் பிரச்சனை அடுத்த சந்தர்ப்பம் என்பவன் பக்தன்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***கேட்காமலிருப்பது கேட்பதை சரணம் செய்வதாகும்.***



# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## 63. எரிச்சல் பட முடியாதது - சமத்துவம்.

- ✲ மனித குணங்களில் ரஜஸ் ஒன்று.
- ✲ அதற்குப் பிடித்ததை ஏற்கும், பிடிக்காவிட்டால் எரிச்சல்படும்.
- ✲ தெய்வங்களும் அதற்கு முழுமையாக விலக்கில்லை.
- ✲ எரிச்சல்படாவிட்டால் எதிராகச் செயல்படும்.
- ✲ பஸ்மாசூரனை தகிக்க விஷ்ணு செயல்பட்டார்.
- ✲ இது செயலுக்குரிய எரிச்சல்.
- ✲ எரிச்சல்படவில்லையெனில் எதிரி மறைவான்.
- ✲ மேடம் அலெக்ஸாண்டர் புலி நெருங்கி வந்தபொழுது எரிச்சல் படவில்லை, கண்ணை மூடி தியானத்தில் அமர்ந்தார். புலி போய்விட்டது.
- ✲ அதைவிட உயர்ந்த கட்டம் புலி என்னைத் தின்னப் பிரியப்பட்டேன் என்பது.
- ✲ அதிகபட்சம் மனிதன் எரிச்சலைக் காட்டாமலிருக்கலாம்.
- ✲ உள்ளே எரிச்சல் படாமலிருக்க சாட்சி புருஷனாயிருக்க வேண்டும்.
- ✲ **எரிச்சல் பட முடியாதவனுக்கு யோகம் பலிக்கும்**.
- ✲ எரிச்சல் படாமலிருக்க ஞானம் தேவை.
- ✲ ஏன் எதிரி எரிச்சல் மூட்டுகிறான் என்பது அந்த ஞானம்.
- ✲ அந்த ஞானமிருந்தால் உள்ளே எரிச்சல் எழாது.
- ✲ தான் விரும்பும் பெண் அழகனான அயோக்கியனை

விரும்புகிறாள் என்றறிந்து டார்சி எரிச்சல்படுவதைவிட அது நிலைக்காது என்ற ஞானம் பெற்றிருந்ததால், அவனை விலக்கி அவளைப் பெற முடிந்தது. **இது பிரம்மப் பிரயத்தனம்**.

- ☼ எரிச்சல் படக்கூடாது என்ற முடிவு இதுவரை எழாத எரிச்சலைத் தரும்.
- ☼ அந்த முடிவு சில நாள் நீடித்தால், பல நாள் பயில முடிந்தால், அன்பர் வாழ்வு அர்த்தமுள்ளதாகும்.
- ☼ முதலாவதாக மற்றவர் அர்த்தமற்ற ஆழ்ந்த அபிப்பிராயங்கள் தெரியும்.
- ☼ அடுத்தது நாமும் அது போலிருப்பதால் நமக்கு அது வருகிறது எனத் தெரியும்.
- ☼ எரிச்சல்படாததோடு, எரிச்சலை விலக்க முடியுமானால் swimming poolல் இருந்து கடலுள் வந்தது தெரியும்.
- ☼ அர்த்தமற்ற வெறும் பெண்ணான மனைவியில் ஆழ்ந்த மனைவியின் பாசம் தெரியும்.
- ☼ பாகற்காயின் ருசி கசப்பு, இப்பொழுது பாகற்காய் ½ நிமிஷம் இனிக்கும்.
- ☼ தானே சுற்றுப்புறம் சுத்தமாகும்.
- ☼ அமைதி என்றால் என்ன என்று முதன்முறையாகப் புரியும்.
- ☼ ஓரளவு அன்பு நாடி வரும்.
- ☼ பெரும் அளவு அன்பு செலுத்த முடியும்.
- ☼ அர்த்தமற்றவையின் அர்த்தம் விளங்கும்.
- ☼ சிலையும், படமும் உயிர் பெறும்.
- ☼ மேலேபடும் காற்று தென்றலாக இனிக்கும்.
- ☼ இனிப்பின் சுவையைக் கடந்த உயர்ந்த சுவை இனிப்பின் பின்னால் தெரியும்.



- ☼ நல்ல சொல் பேசியறியாதவர் நம்மிடம் இனிக்கப் பேசுவார்.
- ☼ வாய் ஓயாமல் பேசுபவர் வாய் மௌனமாகும்.
- ☼ பரம்பரையான ஆசாரம், கட்டுப்பெட்டி, மடியானவர் தன் பெரும் அசுத்தத்தை அறிவார்.
- ☼ உயர்ந்தோர் தம்மை உயர்ந்தோரில்லை என எளிதில் காண்பார்.
- ☼ அற்புதம் மின்னலாகத் *தெறிக்கும்*.

*தொடரும்.....*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***மனித முயற்சி எதிரிக்குத் துணை செய்யும். தெய்வ முயற்சிக்கு எதிரி இல்லை; எதிரும் இல்லை.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***நடக்கும் நல்ல காரியங்களை அருள் செய்வதாகவும், நடக்காததைத் தம் குணம் மறுத்ததாகவும் புரிந்து கொள்வது அறிவுடைமை.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***இடைவிடாது நெஞ்சு அன்னையை அழைக்கும் பொழுதும், உடல் அன்னை பக்கம் திரும்ப மறுக்கிறது. உடலே அன்னையை அழைத்தால் உலகமே நகரும்.***

# நான் என்ன செய்யட்டும் சொல்லுங்கோ?

**Acknowledgements:** *Our sincere thanks go to the author Mr. Jeyakanthan for generously giving permission to release this etext file as part of Project Madurai collections and to Mr. P.K Sivakumar, New Jersey, USA for source etext files in TAB format. Web, PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.*

**© Project Madurai 2003:** *Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet. Details of Project Madurai are available at the website http://www.projectmadurai.org/*

*You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.*

## பகுதி - 1:

நாற்பது வருஷம் ஆச்சு.... இந்தாத்துக்கு மாட்டுப்பொண்ணா வந்து.... கை நெறைய ஒரு கூடைச் சொப்பை வச்சுண்டு.... அப்பா தூக்கிண்டு வந்து விட்டாளே.... அப்போ அம்மா, அவர்தான் எங்க மாமியார் இருந்தார்.... மாமியாருக்கு மாமியாரா அம்மாவுக்கு அம்மாவா.... பெத்த தாய்க்கு மகளாயிருந்தது அஞ்சு வருஷ காலந்தானே.... மிச்ச காலத்துக்கும் மாமியாருக்கு.... மாட்டுப்பொண்தானே.... கூடத்துலே என்னை இறக்கி விட்டுட்டு மேல் துண்டாலே முகத்தை மூடிண்டு அப்பா என்னத்துக்கு அழுதார்னு இப்பவும் நேக்குப் புரியலை....



இதோ இந்த முற்றத்துலே.... அப்பவே அடத்துக்குக் குறைச்சலில்லே, அந்தச் செங்கல் தரையிலேதான் பம்பரம் விட்டாகணும்னு நாக்கைத் துருத்திக் கடிச்சுண்டு சொடுக்கிச் சொடுக்கிப் பம்பரம் விட்டுண்டு நிக்கறாரே, இவர் நேக்கு ஆத்துக்காரர்னு புரியறதுக்கே ரொம்ப நாளாச்சே.... அதுக்காக ‘நறுக் நறுக்’குனு வந்து தலையிலே குட்டறதோ?.... ‘போடா’ன்னு ஒரு நாள் நன்னா வெச்சுட்டேன்.... சமையலுள்ளே காரியமா இருந்த அவர், ஓடி வந்தார். “ஐயையோ.... என்னடீது? அவன்.... இவன்னு.... அவனை”. “அவன் மட்டும் என்னைக் குட்டலாமோ?”.... அம்மாவுக்கு ஒரு பக்கம் சிரிப்பா வரது.... என்னைக் கட்டி அணைச்சுண்டு எங்க உறவைப் பத்தி விளக்கிச் சொல்றார்.... ஆனால், எல்லாம் புரியும் காலம் வரச்ச தானே புரியறது.... நெனைச்சுப் பார்த்தா, எல்லாமே ஆச்சரியமா இருக்கு.... இவர் கிட்டே நேக்கு எப்படி இத்தனை பயம் வந்தது! பயம்னா, அது சந்தோஷமான பயம்.... மரியாதையான பயம்.... பயம்ங்கறதுகூடச் சரியில்லே.... அது ஒரு பக்தின்னு தோணறது.... எப்படியோ வந்துடுத்தே.... ம்.... ம்!.... நாற்பது வருஷத்துக்கு மேலே ஆச்சு....

‘இந்த மனுசனைக் கட்டிண்டு நான் என்னத்தைக் கண்டேன். ஒரு அது உண்டா, ஒரு இது உண்டா’ன்னு குளத்தங்கரைலேயிருந்து கோயில் பிரகாரம் வரைக்கும் அலுத்துண்டு அழுதுண்டு சில பேர் அழிச்சாட்டியம் பண்ணிண்டு திரியறாளே, அவாளெல்லாம் என்ன ஜன்மங்களோ அம்மா!

நேக்கு ஒரு குறையும் இல்லை.... ஆமாம்.... எந்தக் கோயிலிலே வந்து வேணாலும் நின்னு ஈரத் துணியைக் கட்டிண்டுச் சொல்வேன் - எனக்கு ஒரு குறையும் இல்லை.... பாக்கறவா சொல்லுவா.... நேக்குக் குழந்தை இல்லைங்கறதைப் பெரிய குறையாச் சொல்லுவா.... சொல்றா.... நானே கேட்டிருக்கேன். எதுக்கு.... பொய் சொல்லுவானேன்.... நேக்கும் அப்படி ஒரு குறை கொஞ்ச நாள் இருந்திருக்கு. அது எவ்வளவு அஞ்ஞானம்னு அப்பறமாத்தான்

புரிஞ்சது.... நேக்கே சொந்தமா ஒண்ணும் புரிஞ்சுடலை.... அவர் புரிய வச்சார். அவராலேதான் அது முடியும். பேச ஆரம்பிச்சார்னா எங்கேருந்துதான் அந்தச் சூத்திரங்களெல்லாம் கையைக் கட்டிண்டு வந்து நிக்குமோ! சாஸ்திரங்களிலேருந்தும் வேதங்களிலேருந்தும் நிரூபணங்கள் எடுத்துக்காட்டி.... எப்பேர்ப்பட்டச் சந்தேகங்களானாலும் சரி, என்ன மாதிரியான அஞ்ஞானக் கவலைகளானாலும் சரி, அவரோட பேச்சினாலேயே அடிச்சு ஓட்டற சாமர்த்தியம்.... அப்படி ஒரு வாக்கு பலம்.... அப்படி ஒரு ஞானம்.... அது அவருக்கு மட்டுந்தான் வரும்....

ஏதோ, எங்க ஆத்துக்காரர்ங்கறதுக்காக ஒரேயடியாப் புகழ்ந்துடறேன்னு நெனைச்சுக்காதேங்கோ.... அவரைப் புகழற அளவுக்கு நேக்கு ஞானம் போறாது. அப்பேர்ப்பட்ட வித்துவானுக்குச் சரியான நிரட்சரகுஷி வந்து சகதர்மிணியா வாச்சிருக்கே பாருங்கோ! இதைப் பத்தி நானே ஒரு தடவை அவர் கிட்டே சொன்னேன். பெரிய பிரசங்கமே பண்ணிட்டார். அவருக்கு நான் சகதர்மிணியா இருக்கறது எவ்வளவு பாந்தம்கிறதைப் பத்தி.... அவருக்கு.... அதுலே எவ்வளவு சந்தோஷம்கிறதைப் பத்தி.... அவர் என்கிட்டே சொன்னதெல்லாம் நான் எப்படிச் சொல்றது? அவருக்குச் சகதர்மிணியாக இருக்கறதுக்கு நேக்குத் தகுதி இருக்குங்கறது வாஸ்தவமாகவே இருக்கட்டுமே.... அதனாலே அவரைப் புகழற தகுதி நேக்கு வந்துடுத்துன்னு அர்த்தமாயிடுமா?

மகா வித்துவான் ஸரீமான்னு சொன்னா இந்த ராஜதானி பூராத் தெரியும். இவரோட பிரக்கியாதி சென்னைப் பட்டணம் என்ன, காசி வரைக்கும் பரவி இருந்தது....

இவர்கிட்டே படிச்சவாள், இந்தாத்துலே நேக்குக் கூடமாட வேலை செஞ்சவாள் எத்தனை பேர் கலெக்டராகவும் பெரிய பெரிய உத்தியோகத்திலேயும் இருக்கா தெரியுமோ?

நாமே பெத்து, நாமே வளத்து, நாயும் பூனையுமா



நின்னிண்டிருந்தாத்தானா?

இதோ, இப்பவும் சங்கர மடத்துத் திண்ணையிலே, எதிரே வரிசையாக் குழந்தைகளை உட்கார்த்தி வச்சுண்டு அவர் வித்தியாப்பியாசம் பண்ணி வச்சிண்டிருக்கார்.... அவர் குரல் மட்டும் தனியா, ஒத்தையா, கனமா, நாபிலேருந்து கிளம்பி ஒலிக்கறதைக் கேக்கறச்சே உடம்பெல்லாம் சிலிர்க்கறது. அப்புறம் இந்த வாண்டுப் 'படை'களெல்லாம் கூடச் சேர்ந்துண்டு முழங்கறதே.... அந்தக் குழந்தைகள் அத்தனை சிரத்தையோட, பக்தியோட மெல்லீசுக் குரலிலே அவர் மாதிரியே சொல்லணும்னு பிரயாசைப்பட்டு, அந்தக் கனம் இல்லாம அந்த ஸ்தாயியை மட்டும் எட்டறதுக்கு வயத்தை எக்கிண்டு, மார்மேலே கையையும் கட்டிண்டு உச்சாடனம் பண்றாளே.... அது வந்து காதிலே விழறச்சே, வயத்தை என்னமோ செய்யறதே, அது பெத்தவாளுக்கு மட்டுந்தான் வருமோ?....

அவர்தான் சொல்லுவார்.... 'குழந்தையைப் பெத்துக்கறது ஒண்ணும் பெரிய காரியமில்லை; அதுக்கு வயத்தை அடைச்சு வளத்துடறதும் ஒண்ணும் பெரிய காரியமில்லை. அறிவையும் ஒழுக்கத்தையும் தந்து அவனை ஞானஸ்தனாக்கறதுதான் பெரிய காரியம். நாமெல்லாம் சாதாரணக் குழந்தைகளைப் பெத்தவாள்ங்கற பெயரைவிட இந்த மாதிரி ஞானஸ்தர்களை உற்பத்தி பண்ணினவாள்ங்கற பேருதான் சிரேஷ்டமானது....' இன்னும் என்னென்னமோ சொல்லுவார். நேக்கு எங்கே அதெல்லாம் திருப்பிச் சொல்ல வரது?.... ஆனா, அது எவ்வளவு சத்தியம்னு மனசுக்குப் புரியறது.

இவர்ட்டே படிச்சுட்டு இப்போ பட்டணத்துலே ஏதோ காலேஜிலே ஸம்ஸ்கிருத புரபசரா இருக்கானே சீமாச்சு.... இப்போ பண்டித ஸ்ரீனிவாச ஸாஸ்திரிகள்னு பேராம்.... கேக்கறச்சே என்னமா மனசுக்குக் குளிர்ச்சியா இருக்கு.... பெத்தாத்தான் வருமோ.... பெத்தவள் இங்கேதான் இருக்காள்.... தன் பிள்ளை தன்னைச் சரியாகக்

கவனிக்கலேன்னு காலத்துக்கும் சபிச்சிண்டு....

ஒண்ணொண்ணும் அவர் சொல்றச்சே, என்னமோ சமத்காரமா தர்க்கம் பண்ணிச் சாதிக்கற மாதிரித் தோணும். திடீர்னு, அன்னிக்கே அவர் எவ்வளவு சரியாச் சொன்னார்னு நெனச்சு நெனச்சு ஆச்சர்யப்படற மாதிரி ஒண்ணொண்ணும் நடக்கும்.

அன்னிக்குக் கோயிலுக்குப் போயிட்டு வரச்சே சீமாச்சுவோட அம்மா, ஒரு நாழி நிறுத்தி வச்சு, அந்தச் சீமாச்சு இவளைத் திரும்பிக்கூடப் பார்க்காமே மாமியார் வீடே கதின்னு போய்ட்டதையும், அவனை வளக்கறதுக்கும் படிக்க வைக்கறதுக்கும் அவள் பட்ட கஷ்டத்தையெல்லாம் கொஞ்சங்கூட நன்றியில்லாமல் அவன் மறந்துட்டதையும் சொல்லிப் புலம்பிண்டு, அழுதுண்டு அவனைச் சபிச்சாளே.... அப்போ நேக்குத் தோணித்து.... இப்படிப் பெக்கவும் வேண்டாம், இப்படிச் சபிக்கவும் வேண்டாம்னு.... ஏதோ அவள் மனசு சமாதானத்துக்காக நானும் தலையைத் தலையை ஆட்டிண்டிருந்தேனே ஒழிய, நேக்குப் புரிஞ்சது; இந்தக் கிழவி பொறாமையாலே கிடந்து எரிஞ்சுண்டிருக்காள்னு.... கிழவிக்கு இங்கே ஒரு குறைச்சலும் இல்லே.... நன்னா சௌக்கியமாத்தான் இருக்காள்.... இருந்தாலும் தான் பெத்த பிள்ளையினாலெ மத்தவா இன்னும் சுகப்பட்டுடுவாளோங்கற ஆத்திரம், கிழவி மனசை அலக்கழிக்கறது.... பாத்யதை கொண்டாடறவாளாலே எப்படிப் பாசம் கொண்டாட முடியறதே இல்லேன்னு....

எல்லாம் இவர் சொல்லித்தான் நேக்குப் புரியறது.... இல்லேன்னா இந்தக் கிழவியோட சேந்துண்டு நானும் சீமாச்சுவை ஒரு பாட்டம் பாடிட்டுத்தானே வந்திருப்பேன்.

இவர் எல்லாத்தையும் எப்படித்தான் கறாரா, தீர்க்கமா அலசி அலசிப் பார்த்துடறாரோ? தனக்கு அதனாலே நஷ்டமா, லாபமானுகூட யோசிக்கமாட்டார். எத்தனை பேர் அதை ஒத்துக்கறா, எத்தனை பேர் ஒத்துக்கலேங்கறதெப் பத்தியும் கவலைப்படமாட்டார். அவரோட



சாஸ்திரத்துக்கு, தர்க்கத்துக்கு ஒத்துவராத ஒரு காரியத்தை லோகமே அவர் மேலே திணிச்சாலும், 'தூ'னு தள்ளி எறிஞ்சுடுவார் – அப்படி அதைத் தூர எறிஞ்சது எவ்வளவு நியாயம்னு, லோகத்தையே இழுத்து வச்சுண்டு வாதம் பண்ணவும் தயாரா இருப்பார். நானும் இத்தனை காலமா பாத்துண்டிருக்கேனே.... ஒத்தராவது, 'அதென்னமோ, நீங்க சொல்றது சரியில்லை ஸ்வாமி'ன்னு சொல்லிண்டு போனதில்லை. அப்படிச் சொல்லிண்டு வருவா.

அவாளோடெல்லாம் திண்ணையிலே உக்காந்து இவர் பேசிண்டிருக்கறச்சே, நான் அவர் முதுகுக்குப் பின்னாலே அறையிலே உட்கார்ந்து கேட்டுண்டிருப்பேன். அவர் பேசறதிலே ரொம்ப விஷயங்கள் எனக்குப் புரியறதே இல்லை. அவர் என்னமா இங்கிலிஷ் பேசறார். நேக்குத் தெரிஞ்சு இருபது வயசுக்கு மேலே இவர் இங்கிலீஷ் படிச்சார். ஒத்தருக்கு ஸம்ஸ்கிருத பாடம் சொல்லிக் கொடுத்துண்டு – அவருக்கு இவரைவிட வயது கொஞ்சம் அதிகமாகவே இருக்கும் – அவர்கிட்டே இவர் இங்கிலீஷ் கத்துண்டார். இங்கேருந்து கும்பகோணத்துக்குப் போயிப் போயி என்னென்னமோ பரீட்சையெல்லாம் எழுதினார்.

இப்போ, இவர் எழுதின புஸ்தகங்களை அங்கெல்லாம் படிக்கிறவாளுக்குப் பாடமா வெச்சிருக்காளாம்.

பத்து வருஷத்துக்கு முன்னே காசியிலே ஏதோ மகாநாடுனு இவர் போறச்சே, நானும் கூடப் போனேன். இவருக்கு என்னென்னமோ பட்டம் எல்லாம் குடுத்தா.... நேக்கு ரொம்பப் பெருமையா இருந்தது. நான் வெள்ளிக் குடத்து நிறைய கங்காதீர்த்தம் எடுத்துண்டு வந்து, ஊர்லே இருக்கிறவாளுக்கெல்லாம் குடுத்தேன். நேக்கென்ன குறைச்சல்?

அப்போதான் காசிலேருந்து திரும்பி வரச்சே சென்னப் பட்டணத்துலே சீமாச்சு ஆத்திலே தங்கினோம். பட்டணத்துப் பெரிய ரயிலடிக்கு, சீமாச்சு மோட்டார் காரோட வந்திருக்கான்.

ரயிலடியிலேயே எங்களை நிறுத்தி வச்சு சாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணிண்டான். சமுத்திரக் கரையை எல்லாம் சுத்திக் காட்டினான். சென்னப் பட்டணத்துலே மோட்டார் கார் இல்லாமே ஒண்ணும் முடியாதாம். அப்பவும் முன்னே மாதிரியே இவர்கிட்டே வந்து கையைக் கட்டிண்டு நின்னுண்டு ஏதேதோ சந்தேகமெல்லாம் கேட்டுண்டான். ஆனால், அவன் காலேஜீக்குப் போறச்சே அவனைப் பாக்கறதுக்கு நேக்கே பயமாயிருந்தது. துரை மாதிரி என்னென்னத்தையோ மாட்டிண்டிருக்கான். இவர் என்னடான்னா அதைப் பார்த்துட்டு 'ஓ'ன்னு சிரிக்கிறார்.

அதுக்கு அப்பறந்தான் ஒரு நாள் இந்தாத்துக்கு முன்னாடி ஒரு பெரிய கார் வந்து நின்றது. யார் யாரோ பெரிய மனுஷாள் – சீமாச்சு புரபசரா இருக்கானே அந்தக் காலேஜை சேர்ந்தவாளாம் – எல்லாம் வந்து இந்தாத்துத் திண்ணையிலேதான் உட்கார்ந்துண்டா.... சீமாச்சு மட்டும் சொந்தமா அடுக்களை வரைக்கும் வந்துட்டான். நான் அவன்ட்டே அடிக்கடி ஒரு நடை வந்து தாயாரைப் பார்த்துட்டுப் போகப்படாதோன்னு கேட்டேன்.... 'எனக்கெங்கே முடியறது.... என்னோட வந்துடுனு கூப்பிட்டாலும் வரமாட்டேங்கறாளே'ன்னு சொல்லி வருத்தப்பட்டுண்டான். அப்பறமா அவன் வந்திருக்கிற காரியத்தைச் சொன்னான்.

அவன் வேலை பாக்கற காலேஜிலே இவரை ஏதோ பெரிய உத்தியோகத்துலே வச்சுக்கறதுக்குத் தவம் கெடக்கறாளாம். ஆனால், இவரைக் கேக்கறதுக்குப் பயப்படறாளாம். 'நான் கேட்டு அவரைச் சம்மதிக்க வெக்கறேன்'னு தைரியம் குடுத்து இவன் அழைச்சிண்டு வந்திருக்கானாம்.... இன்னும் என்னென்னமோ சொன்னான்.... நேக்குக்கூட ரொம்ப ஆசையாத்தான் இருந்தது.

இவர் வந்ததும், எல்லாரும் திண்ணையிலே உக்காந்துண்டு பேசினா, பேசினா அப்பிடிப் பேசினா. நான் அறைக்குள்ளே உக்காந்து கேட்டுண்டே இருந்தேன். நேக்கு அவர் பேசினது ஒண்ணும் புரியலை.



ஆனால், ஒண்ணு புரிஞ்சது.... அவா ஜம்பம் இவாகிட்டே சாயலைன்னு....

கடைசியிலே அன்னிக்கு அவாள்ளாம் போனப்பறம் நானே கேட்டுட்டேன். "உங்களுக்கு இந்த உத்தியோகத்தெ ஒத்துண்டா என்ன? அங்கே படிக்கிறவாளும் மாணவர்கள்தானே?.... உங்களுக்கு என்ன இப்படி ஒரு பிடிவாதம்? பாவம்! சீமாச்சு ரொம்ப ஆசை ஆசையா நம்பிக்கையோட வந்தான்" – நான் சொன்னதெக் கேட்டு அவர் சிரித்தார்.

இவருக்கு இது ஒண்ணு. உடம்போடயே பொறந்தது அந்தச் சிரிப்பு. அதுவும் இந்தச் சிரிப்பு இருக்கே என்கிட்டே மாத்திரம்தான்.

சிரிச்சுண்டே சொன்னார்.

"சீமாச்சு கட்டிண்டு திரியறானே அந்த மாதிரி என்னை வேஷம் கட்டிப் பாக்கணும்னு நோக்கு ஆசையா இருக்காக்கும்.... வித்தியாப்பியாசம் பண்ணி வெக்கறதுக்கு கூலி வாங்கப்படாதுங்கறது உனக்குத் தெரியாதா? ஆசிரியனுக்குக் கூலி கொடுத்துட்டப்பறம் மாணாக்கனுக்கு அவர் கிட்டே என்ன மரியாதை இருக்கும்? எப்படி மரியாதை இருக்கும்? இவன் கூலி வாங்கறவன் ஆயிடறானே.... கூலி பத்தாதுன்னு கொடி புடுச்சிண்டு கோஷம் போட்டுண்டு – என்னைக் கொடி புடிக்கவும் கோஷம் போடவும் கூப்பிட மாட்டான்னாலும் – அந்தக் கும்பலுக்குத் தலைவரா வாங்கோம்பா.... எனக்கு இதெல்லாம் ஆகிற காரியமா? நீயே சொல்லு"ன்னார்.

நான் என்னத்தைச் சொல்றது?.... பேசாம அவர் பேசிண்டிருந்ததெ வாயை மூடிண்டு கேட்டுண்டு இருந்தேன்.

இவர் உடம்பிலே ஒரு சட்டையெப் போட்டுண்டு நிக்கற மாதிரி நெனச்சுப் பாக்கிறப்பவே நேக்குச் சிரிப்புச் சிரிப்பா வரது? அந்த நெனப்பே ஒரு பாந்தமில்லாம இருக்கே.... நானும் அவரோட சிரிச்சிட்டு, அந்த விஷயத்தை அதோட விட்டுட்டேன்.

அவரைப் பத்தி இவ்வளவு தெரிஞ்சிருந்தும் நான் போயி அவரைக் கேட்டதை நெனச்சித்தான் வெட்கப்பட்டேன். ஆனாலும், இந்த நாற்பது வருஷத்தில் அசடாவேதான் இருக்கேன்.... புதுசு புதுசா ஏதாவது அசட்டுத்தனம் பண்ண வேண்டியது, அவர் சிரிக்க வேண்டியது - இப்படி ஒரு ஜன்மமாயிட்டேன்.

ஒரு பத்து நாளக்கி முன்னே பாருங்கோ.... இப்படித்தான் - இவர்ட்டே படிக்கிற பையன் ஒருத்தன்.... ஏதோ ஒரு சீட்டை எடுத்துண்டு வந்து, மாமி மாமி.... இது கெவர்மண்ட் நடத்தற பரிசுச் சீட்டோ, அதிர்ஷ்டச் சீட்டோ.... என்னமோ சொல்லி, ஒரு ரூபாதான், வாங்கிக்கோங்க.... கெடைக்கறதே கஷ்டம்.... உங்களுக்காகச் சேத்து நான் வாங்கிண்டு வந்தேன்னு தந்தான்.... நானும் அதெப் பத்தி ஒண்ணும் பிரமாதமா நெனச்சுக்காம, ஏதோ கொழந்தை நம்மை நெனச்சிண்டு அக்கறையோட வாங்கி வந்திருக்கேன்னு ஒரு ரூபாயைக் கொடுத்து வாங்கிட்டேன்.

அந்தக் கொழந்தை அதெப் பத்தி பெரிய பிரசங்கமே பண்ணினான்.... எத்தனையோ பேர் அதிலே பிரைஸ் வந்து லட்சாதிபதியா ஆயிட்டாளாம்.... ஏழைகளுக்குத்தான் அதுவும் விழறதாம்.... இன்னும் என்னென்னவோ சொன்னான்.... நான் சும்மா ஒரு வெளையாட்டுக்குத்தான் வாங்கினேன்.... ஆனாக்க அன்னிக்கி சாயந்திரமே இவர் திண்ணையிலே உக்காந்துண்டு ஒரு அஞ்சாறு பேர்கிட்டே இந்தப் பரிசுச் சீட்டைக் கிழிச்சிக் கட்டிண்டிருந்தாரே பார்க்கலாம்.

அறையிலே உக்காந்து கேட்டுண்டு இருக்கறப்ப - என்னை அப்படியே செவுள்லே 'பளார் பளார்'னு பிடிச்சிண்டு அறையற மாதிரி இருந்தது.

அதுவும் அன்னிக்கி அவர் பேசறச்சே, அது சாதாரணமா எப்பவுமே பண்ணுவாரே அந்த மாதிரி நிதானமா வாதம் மாதிரி இல்லே, இந்த லோகத்தையே சபிக்கப் பொறப்பட்டவர் மாதிரி



ஆவேசமா கத்தினார்.

என்னத்துக்கு இவருக்கு இதிலே இவ்வளவு கோபம்னு நேக்குப் புரியவே இல்லே.

"இந்த தேசத்திலே இது நடக்கலாமாங்காணும்.... சூதாடி சூதாடட்டும்.... சோரம் போறவா சோரம் போகட்டும்.... ராஜரீகம் பண்றவா, லோக பரிபாலனம் பண்றவா இதைச் செய்யலாமாங்காணும்.... கலி முத்தி, நாம அழியப் போறொம்கறத்துக்கு இதாங்காணும் அத்தாட்சி. நெறி தவறாம ராஜபரிபாலனம் பண்ணின தருமன் எப்பிடி அழிஞ்சான்?.... யோசிச்சுப் பாரும்.... தருமனே சூதினாலேதானே அழிஞ்சான்.... சூதிலே ஜெயிச்சவனும் வாழறதில்லே, தோத்தவனும் வாழறதில்லேங்கற சத்யத்தைத்தானே ஐயா, மகாபாரதம் பேசறது.... சூதாட்டத்துக்கும் ஒரு தர்மம் இருக்கு, கேளும்.... சம அந்தஸ்திலே இருக்கிறவாதான் சூது ஆடலாம்.... அதுவே பாவம்தான்.... அந்தப் பாவத்துக்கும் ஓர் அத்து வெச்சிருக்கா.... ராஜரீகம் பண்றவா, ராஜ்ய பரிபாலனம் செய்யறவா பாமர மக்களை எல்லாம் இப்படி மாயாஜாலம் பண்ணி சூது ஆடறாளே, இது அடுக்குமா? போச்சு.... எல்லாம் போச்சு.... இனிமே இந்த ஜன சமூகத்திலே எந்த விவஸ்தையும் இருக்காது.... ஓய்.... வறுமையினாலே அழியறதைவிட சூதினாலேதான் ஜன சமூகமே அழிஞ்சு போயிடும். திருவள்ளுவருக்குத் தெருத் தெருவா சிலை வெச்சு பிரதிஷ்டை பண்ணாப் போறுமா.... அவர் சூதுன்னு பொருள்பால்லே ஓர் அதிகாரமே எழுதி வெச்சிருக்காரே...."ன்னு அந்தப் பத்துப் பாட்டையும் எடுத்தெடுத்துச் சொன்னார். அர்த்தம் சொன்னார்.... மகாபாரதத்திலேருந்து ஸ்லோகங்கள் பாடினார். 'உருப்படமாட்டேள்.... உருப்படமாட்டேள்....'னு தலையிலே அடிச்சிண்டார்....

எனக்கு வயத்திலே புளி கரைக்க ஆரம்பிச்சுடுத்து.... ஏண்டா, இந்தச் சனியனை ஒரு ரூபா குடுத்து வாங்கினோம்னு இருந்தது. ஆனாலும், என்னத்துக்கு இவர் இதுக்காகப் போயி இவ்வளவு

ஆவேசம் காட்டறார்னும் புரியலை. இவர் சட்டை போட்டுக்கறதில்லே; லோகமே அதுக்காக இவர் மாதிரி சட்டையில்லாம, குடுமியும் வெச்சுண்டு, பஞ்சாங்கம் பாத்து க்ஷவரம் பண்ணிண்டு இருக்கணும்னு சொல்வாரோன்னு நான் பண்ணின காரியத்துக்கு வசதியாக மனசுக்குள்ளே, எதிர்வாதம் பண்ணிண்டேன்.

அந்தச் சீட்டை வாங்கி வச்சுண்டதனாலேயே இப்ப என்ன கெட்டுப் போயிட்டுதுன்னு சமாதானப்பட்டுண்டாலும், திடீர்னு நம்ம போறாத வேளை ஒரு நூறு ரூபா விழுந்து வெக்கறதுன்னு வெச்சுக்கோங்கோ.... ஊரு பூரா இதுன்னா ஒரே அக்கப்போராயிடும்!....

அதுவும் இவர் இந்த மாதிரிப் பேசிண்டு இருக்கறச்சே.... நான் வாங்கி, அது பரசியமா ஆயிடுத்துன்னா, இவரோட நாணயத்தைன்னா, எல்லாரும் சந்தேகப்படுவான்னு நேக்கு மனசைக் கொழப்பிண்டே இருந்தது....

அந்தக் கொழந்தை – அவன்தான் சீட்டுக் குடுத்தவன் – சொல்லித்து, பத்திரிகைக்காரா எல்லாம் போட்டோ பிடிக்கறவனையும் அழைச்சிண்டு எந்தப் பட்டிக்காடா இருந்தாலும் தேடிண்டு வந்துடறாளாம்.... சென்னப் பட்டணத்திலே இதுக்காகப் பெரிய திருவிழா நடத்தி, ரொம்பப் பெரிய பெரிய மனுஷாள் கையாலேதான் இதைத் தருவாளாம்.... அட கஷ்ட காலமே!....

சரி, என்னமோ வாங்கிட்டேன். இதெல்லாம் என்ன வீண் கற்பனைன்னு அவர்கிட்டே இது விஷயமா நான் ஒரு வார்த்தைகூடப் பேசிக்கலே....

வேணும்னே அன்னிக்கு அவருக்கு சாதம் போடறச்சே நானே பேச்சைக் கிளப்பினேன்....

"என்ன அது? என்னமோ பிரைஸ் சீட்டாம்.... ஒரு ரூபா குடுத்து வாங்கினவாளுக்கு ஒரு லட்சம் ரூபாய் கெடைக்கறதாம் – கெவர்மெண்டாரே நடத்தறதனாலே பொய், மோசடி ஒண்ணும்



கெடையாதாம். நாணயமா நடக்கறதாம். பக்கத்தாத்துப் பொண்ணு பத்து ரூபாய்க்கு ஒரேயடியா வாங்கி இருக்காளாம். அது என்ன அது?...."ன்னு கேட்டு வெச்சேன்.

"அது நம்மாத்து அடுக்களை வரைக்கும் வந்தாச்சா? அது ராஜாங்கம் நடத்தற சூதாட்டம் – அவ்வளவுதான். வாந்தி, பேதி மாதிரி ஜனங்களை வெரட்டி வெரட்டிப் புடிக்கறது இது. வாந்தி, பேதி, வைசூரி வராம தடுக்கிற காரியத்தைச் செய்யற கெவர்மெண்டார் தான் இதையும் செய்யறா. அதனாலே அவாளுக்குப் பணம் கெடைக்கறதாம். ஏழைகள் லட்சாதிபதியாறாளாம்.... எப்படியும் போகட்டும். நீயும் நானும் லட்சாதிபதியாகலேன்னா அழறோம்? நமக்கென்ன அதைப் பத்தி"ன்னார்.

"ஒரு லட்சத்தைக் கொண்டு வந்து உங்களண்ட கொடுத்தா, வேணாம்னு சொல்லிடுவேளா?"ன்னேன்.

இவர் என்னைப் பார்த்துச் சிரித்தார். எனக்கு அவமானமா இருந்தது.... உடம்பு கூசித்து.

"நாற்பது வருஷம் என்னோடே வாழ்ந்த உனக்கா, இப்படி ஒரு சந்தேகம் வந்தது"ன்னு கேக்கற மாதிரி இருந்தது அந்தச் சிரிப்பு.... நான் தலையைக் குனிஞ்சிண்டேன்.

"நீங்க வேணாம்னு சொல்லுவேள், அது எனக்குத் தெரியும். ஏன் அப்படிச் சொல்லணும்னு கேக்கறேன்?.... உங்க கொள்ளுப் பாட்டனாருக்கு மானியமா கெடச்ச இந்த வீட்டுக்கு, அந்த மேற்கு மூலையிலே மூணு வருஷமா சுவத்திலே விரிசல் கண்டு, மழை பேயறச்சே ஒரே தெப்பமா ஆறதே – அதெ சரி பண்றதுக்கு வழி இல்லாம இருக்கோமே – நமக்கும் பணம் அவசியமாத்தானே இருக்கு.... எதுக்கு அதிர்ஷ்ட லட்சுமியை அலட்சியம் பண்ணணும்னு யோசிக்கிறேன். அது தப்பா?"ன்னு கேட்டேன்.

"ஓ! நீ பேசறதெப் பாத்தா உனக்கு அந்தச் சீட்டு வாங்க ஒரு

ஆசை; அப்படித்தானே?"ன்னு கேட்டார்.

நான் பேசாம இருந்தேன்.

"அசடே.... அசடே.... ஆசைதான் மானத்துக்குச் சத்ரு. அதிலே பரிசு வராதுங்கறதினாலே நான் அது தப்புன்னு சொல்லலே. வந்தாலும் அது அதர்மமா வந்த, பல பேரை வயிறெரிய வச்சு சம்பாதிக்கிற பணம்னு சொல்றேன். தரும வழியில் சம்பாதிக்காம வர்ற செல்வம், பாப மூட்டைன்னா.... நீ சொன்னயே எங்க கொள்ளுப் பாட்டனாரைப் பத்தி.... அவாள்ளாம் உஞ்சவிருத்தி பண்ணித்தான் மகா மேதைகளா இருந்தா.... நேக்கு நன்னா ஞாபகமிருக்கு.... அப்பா, இதே சங்கர மடத்திலே பகலெல்லாம் வித்தியாப்பியாசம் பண்ணி வைப்பார்.... சாயங்காலம் காலக்ஷேபம் பண்ணுவார். காலையிலே உஞ்சவிருத்திக்கிப் போவார்.... மறுவேளைக்கு மீதி இல்லாம சேருகிற அளவுதான் அந்தப் பாத்திரம் இருக்கும். ஸ்லோகத்தெச் சொல்லிண்டு அவர் நடு வீதியிலேதான் நடப்பார்.... வீட்டுக்குள்ளேயிருந்து அந்தாத்துக் கொழந்தை கையினாலே ஒரு பிடி அரிசி அளவா எடுத்துண்டு நடு வீதியிலே வந்து அவருக்கு பிக்ஷை தருவா.... எதுக்குத் தெரியுமா கொழந்தையின் கையை அளவா வெச்சா.... பெரியவா கை அளவானா நாலு வீட்டோட பாத்திரம் நெறைஞ்சி போயிடும்.... மத்தவா வீட்டிலே வெச்சுண்டு காத்திருப்பாளே, அந்தப் பிக்ஷையைத் தடுத்த பாவம், அதிகமா போட்டவாளுக்கு வந்துடாதோ?.... அதுக்காகத்தான். அந்த மாதிரிப் பாத்திரம் நெறைஞ்சப்புறமும் யாராவது கொண்டு வந்தா, அதெ வாங்கமாட்டார் - பிக்ஷை போட வந்தவா தலையிலே ரெண்டு அட்சதையை இவர் பாத்திரத்திலேருந்து போட்டு ஆசிர்வாதம் பண்ணிட்டு வருவார்.... அந்த வம்சத்திலே வந்த புண்ணியம்தான் இந்த ஞானம் பிடிச்சிருக்கு. இதைவிட அதிர்ஷ்டம் என்னன்னு எனக்குத் தெரியலே.... இந்த நிம்மதியை.... இந்த மனஸ் ஆரோக்கியத்தை எத்தனை லட்சம் தரும்?.... சூதாட்டத்துலே, பணத்தாலே லட்சாதிபதிகளை இந்த அரசாங்கம் உருவாக்கலாம். ஒரு ஞானஸ்தனை, ஒரு சதுர்வேத



பண்டிதனை உருவாக்கச் சொல்லேன், பார்க்கலாம்...."னு அன்னிக்குப் பூரா, போய் வந்து போய் வந்து என்னண்ட பேசிக் கொண்டிருந்தார்.

இதெல்லாம் நடந்து பத்து நாளைக்கு மேலே ஆயிடுத்து.... அந்தச் சீட்டுச் சமாசாரத்தையே நான் மறந்துட்டேன்.

நேத்து அந்தக் கொழந்தை - சீட்டு கொண்டு வந்து குடுத்தானே - ஒரு பேப்பரை எடுத்துண்டு வந்து 'பரிசு கெடைச்சவா நம்பரெல்லாம் வந்திருக்கு.... உங்க சீட்டைக் கொண்டு வாங்கோ.... பார்க்கலாம்'னு உற்சாகமாக் கத்திண்டு ஓடி வந்தான். நல்ல வேளை, அந்தச் சமயம் அவர் ஆத்துலே இல்லை....

எனக்கு வயத்தை என்னமோ பண்ணித்து.

'ஈஸ்வரா, என்னைக் காட்டிக் குடுத்துடாதே'ன்னு வேண்டிண்டப்ப, ஒரு யுக்தி தோணித்து.

'அதெ எங்கே வெச்சேனோ காணோம்டா அப்பா'ன்னு அவனண்ட பொய் சொல்லிட்டேன்.... அதிலே ஏதாவது நம்பர் வந்து தொலைஞ்சிருந்தா, ஊரே வந்து இங்கே கூடிடாதோ?

அந்தக் கொழந்தெக்கு அப்பிடியே மொகம் வாடிப் போயிடுத்து.

கோவிச்சுக்கற மாதிரி பாத்துட்டு அந்தப் பேப்பரையும் போட்டுட்டுப் போயிட்டான்.

அவன் போனப்பறம் நான் அந்தப் பேப்பரை எடுத்துண்டு அறைக்குள்ளே போயி, தனியா வெச்சிண்டு பார்த்தேன்.

நேக்குப் படிக்கத் தெரியாதுன்னாலும் எண்கள் தெரியும். அந்த எண்களுக்கு முன்னாலே ஏதோ எழுத்துப் போட்டிருக்கு.... அது என்னன்னு தெரியலை. ஆனா, அதே மாதிரி இந்தச் சீட்டிலே இருக்கான்னு தேடிப் பார்த்தேன்.

தெய்வமே! எடுத்தவுடனே மொதல் மொதல்லே அதே மாதிரி ரெண்டு எழுத்து.... அப்புறம் அதே மாதிரி மூணு.... ஏழு, சுன்னம்....

ஒண்ணு.... ஒண்ணு.... ஆறு!....

அப்படீன்னா, ஒரு லட்ச ரூபாய் எனக்கே அதிர்ஷ்டம் அடிச்சிருக்கா?.... ஐயையோ.... இப்ப நான் என்ன செய்வேன்?

மத்தியானம் அவர் வந்தப்ப, சீட்டைக் கொண்டு போயி அவர் காலடியிலே வெச்சு 'என்னை மன்னிச்சுடுங்கோ'ன்னு அழுதேன்.

''நான் வெளையாட்டா அந்தக் கொழந்தை வற்புறுத்தினானேன்னு வாங்கிட்டேன். இதெப்பத்தி நீங்க இவ்வளவு கோவமா இருக்கேள்ன்னு அப்பறம்தான் தெரிஞ்சது.... நமக்கு எங்கே விழப்போறதுன்னு அசட்டையா இருந்துட்டேன்.... பிரைஸ் விழப்படாதுன்னு ஸ்வாமிய வேண்டிட்டேன்.... இப்போ இப்படி ஆயிடுத்தே.... மன்னிச்சு இதையும் என்னையும் ஏத்துண்டே ஆகணும்''னு அழுதேன்.

அவர் அதே மாதிரி சிரிச்சார். சிரிச்சிண்டே என்னெத் தூக்கி நிறுத்தினார். முகத்திலே அந்தச் சிரிப்பு மாறாமலே சொன்னார்:

''அடியே!.... நீ இப்ப லட்சாதிபதியாய்ட்டே.... சபாஷ்....! இது நான் சம்பந்தப்படாம நீயே தேடிண்ட சம்பத்து. என்னத்துக்கு என் காலண்டை கொண்டு வந்து வச்சு இந்தப் பாவத்தை என் தலையில் கட்டப் பாக்கறே! நேக்கு லட்சம் வேண்டாம்னு சொன்னது வெளையாட்டுக்கு இல்லே. நெஜமாவே நேக்கு வேண்டாம். நேக்கு இருக்கற கவலையெல்லாம் முன்னே மாதிரி.... இப்ப வர வர வேதாப்பியாசம் பண்றவா கொறைஞ்சிண்டு வராளேங்கறதுதான்.... இன்னும் ஒரு பத்துப் பிள்ளைகள் இதுக்குக் கெடைச்சாப் போதும்.... பணத்தாலே அவா வரப்படாது.... பணத்துக்காகவும் வரப்படாது.... இது உனக்குப் புரியாது. சரி, இது உன்னோட பிரச்சனை. நான் எப்பவுமே உஞ்சவிருத்தி பிராமணன்தான். என் தோப்பன், பாட்டன் - எல்லோரும் வந்த வழி அதுதான். லட்சாதிபதிக்குப் புருஷனா இருக்கற அந்தஸ்து, கொணம் எதுவும் எனக்குக் கெடையாது....''ன்னு பேசிண்டே போனாரே அவர்.



''ஏன் இப்படியெல்லாம் பிரிச்சுப் பிரிச்சுப் பேசறேள்?.... இப்ப நான் இதுக்கு என்ன செய்யணும்னு சொல்லுங்கோ.... நான் செய்யறேன்.... நான் இப்படி ஆகும்னு எதிர்பார்க்காதது, நடந்துடுத்து.... இனிமே நான் என்ன செய்யணும்''னு அவரைத் திரும்ப திரும்ப நான் கேக்கறேன்....

கொஞ்சம்கூட மனசிலே பசை இல்லாம என்னைப் பார்த்து அவர் சிரிக்கிறார்.

கடைசிலே அவருக்குப் பாடசாலைக்குப் போக நேரமாயிடுத்தாம்.... போகும்போது அதே மாதிரி சிரிச்சுண்டே சொல்லிட்டுப் போனார்.

''இந்த அதிர்ஷ்டச் சீட்டைப் பயன்படுத்திக்கறதுன்னு முடிவு பண்ணினா அது உன் இஷ்டம். நேராப் போயி படம் புடிச்சுண்டு பத்திரிகையிலே போட்டோ போட்டுண்டு ஜம்னு நீ வாழலாம்.... நான் இன்னார் சகதர்மிணின்னு சொல்லிக்கப்படாது.... ம், உன் திருப்திக்கு அந்தப் பொய்யைச் சொல்லிண்டு காலம் தள்ளிக்கோ. இல்லேன்னா, 'இந்த மாயை வலையிலே நான் மாட்டிக்கலே; எனக்கு இது வேண்டாம்'னு அந்தத் தரித்திரச் சீட்டைக் கிழிச்சு எறி. ஆமாம், கிழிச்சு எறிஞ்சுடு. வேறே யார் கிட்டேயாவது குடுத்து அதுக்கு வட்டி வாங்கிண்டாலும் ஒண்ணுதான், நன்றியை வாங்கிண்டாலும் ஒண்ணுதான். சூது மனசுக்கு அதெல்லாம் தோணும். அதுக்கெல்லாம் பலியாகாம எந்த விதத்திலயும் அந்தச் சூதுக்கு ஆட்படாமே அதை கிழிச்சு எறிஞ்சுடு. இரண்டும் உன்னோட இஷ்டம். அது பாவமா, பாக்கியமான்னு முடிவு பண்ண வேண்டியது நீ.... எனக்கு நாழியாறது''ன்னு சொல்லிட்டுப் போயிண்டே இருக்காரே....

இதுக்கு நான் என்ன செய்யலாம், சொல்லுங்கோ? தெய்வமே! ஒரு லட்சம்! இந்த ஒரு லட்சத்தை, அதிர்ஷ்ட லட்சுமியை நிர்த்தாட்சணியமா கிழிச்சு எறியறதா? அவர் கையிலே குடுத்தா, கிழிச்சு எறிஞ்சுடுவார். அவர் மாதிரி ஞானிகளுக்கு அது சுலபம்.

நம்பளை மாதிரி அஞ்ஞானிகளுக்கு அது ஆகற காரியமா, சொல்லுங்கோ?

எத்தனை லட்சத்தையும் விட இவர் உசந்தவர்தான், நான் இல்லேங்கலே. அந்த லட்சத்தைக் கால்தூசா மதிக்கிறாரே இந்த மகா புருஷர். உஞ்சவிருத்தி பண்ணினார்னா இவருக்கு ஒரு குறையும் வந்துடாது. இப்பேர்ப்பட்டவரோட சம்சாரம் பண்ணினா, அந்த உஞ்சவிருத்தி வாழ்க்கையிலேயும் நேக்குப் பெருமை உண்டு.

பணம் பெரிசா, ஞானம் பெரிசாங்கிறதெல்லாம் நேக்குத் தெரியாது. ஆனால், பணம் - அது எவ்வளவு அதிகம்னாலும் எப்படி நிலையில்லையோ அதே மாதிரி மனுஷாளும் எவ்வளவு பெரிய ஞானியாயிருந்தாலும் வாழ்க்கை சாசுவதமில்லையே!

அப்படி நினைக்கிறதோ, சொல்றதோ மகா பாவம். ஆனால், இந்தக் காலத்திலே எப்பேர்ப்பட்ட பதிவிரதையும் உடன்கட்டை ஏறிடுறதில்லையே! இவருக்கு அப்புறம் ஒருவேளை நான் இருக்க வேண்டி வந்ததுன்னா.... சிவ! சிவா!....

உஞ்சவிருத்தி பண்றதிலே எனக்கென்ன பெருமை! எல்லோரும் பிச்சைக்காரின்னு சொல்லுவா. கட்டினவளைப் பிச்சைக்காரியா விட்டுட்டான்னு இந்த மகா ஞானியைப் பத்தியும் பேசுவா.

அவர் கிழிச்சு எறியலாம். நான் அதைச் செய்யலாமா? ஆனால், அவர் அப்படிச் சொல்லிட்டுப் போயிட்டார்.

நான் கையிலே சீட்டை வச்சுண்டு நிக்கறேன், கனக்கறது.

**இதுக்கு நான் என்ன செய்யட்டும் - சொல்லுங்கோ?**

***(வழி தெரியாமல் திகைத்து நிற்கும் பெண்மணி அன்னை வழியில் பிரச்சனையைத் தீர்க்க முயன்றால் என்ன நடக்கும்?***

***ஜெயகாந்தனின் கதையை சமர்ப்பணன் தொடர்கிறார்.....)***



## பகுதி - 2:

நான் இப்படி திகைச்சு நின்னுண்டிருக்கறச்சே எதுத்தாத்து சாஸ்திரிகள்கிட்டே ஜோசியம் படிக்க வர்ற புள்ளையாண்டான் கேட்டான், "என்ன மாமி, முகம் வாடியிருக்கு?"

அவன் ஆடிட்டர் படிப்பு படிச்சிருக்கான். ஜோசியம் படிப்பான். கையிலே ஒரு கம்ப்யூட்டர் வச்சுண்டு பித்து பிடிச்ச மாதிரி அதையே சதா வெறிச்சு பாத்துண்டு இருப்பான். கதை எழுதறேம்பான். அம்பாள் உபாசகன்னு சொல்லுவான். அப்புறம் யோகம் பத்தி படிக்கிறேம்பான். இன்னும் என்னென்னவோ சொல்லுவான். தான் என்ன செஞ்சிண்டிருக்கேன்னு அவனுக்கும் தெரியாது, மத்தவாளுக்கும் தெரியாது.

என் பிரச்சனையைப் பற்றி அவன்கிட்டே சொன்னேன். உடனே கம்ப்யூட்டரில் என்னவோ படபடன்னு அடிச்சான். சித்த நேரம் கழிச்சு, "மாமி, உங்களுக்கு வழி பிறந்திடுத்து. ஒண்ணு, சீட்டை கிழிச்சு போடுங்கோ, அது பிடிக்கலேன்னா யாருக்காவது கொடுத்துடுங்கோ"ன்னான்.

பாண்டிச்சேரியிலே அவனுக்கு வேண்டிய ஒருத்தர் இருக்காராம். அவர்தான் இந்த யோசனைகளைச் சொன்னதாகவும், கம்ப்யூட்டரிலே கடுதாசி எழுதி, உடனே பதிலும் வாங்கிட்டதாகவும் சொன்னான். 'ஏண்டாப்பா, இரண்டுலே எது நேக்கு சரி வரும்?' அப்படின்னு அவனைக் கேட்டேன். 'அதை நீங்கதான் முடிவு பண்ணனும்'ன்னான்.

ஒவ்வொரு விஷயத்திலும் பகவான் ஒரே ஒரு வழியைக் காட்டப்படாதா! இப்படி தேவையில்லாம பல வழிகளை வைச்சு குழப்பிடறானே!

'அம்பி, நீயா இருந்தா என்னடா பண்ணுவே?' இப்படி நான் கேட்டதும், 'சீட்டை கிழிச்சு போட்டுடுவேன்'ன்னான்.

பாண்டிச்சேரியிலே மதர்னு ஒரு வெள்ளைக்கார அம்மாள்

இருந்தாளாம். ஒரு சமயம் அவா நடத்தின மடத்திலே செலவுக்கு திண்டாட்டமா இருந்ததாம். ஒரு சாதகன் சீட்டு ஒண்ணு வாங்கி, 'அம்மா பரிசு விழணும்னு ஆசிர்வாதம் பண்ணுங்கோ, செலவுக்கு ஆகும்'ன்னானாம். அந்த அம்மாளோ சீட்டைச் சுக்கல் சுக்கலா கிழிச்சுப் போட்டுட்டாளாம். இந்தப் பணம் தெய்வ காரியங்களுக்கு உபயோகப்படாதுன்னு சொன்னாளாம்.

"நாய் வித்த காசு குலைக்குமா அம்பி?"ன்னு கேட்டேன். "நிச்சயம் குலைக்கும்"ங்கிறான்.

"எல்லா நோட்டும் சர்க்கார் நோட்டுதானே, இதில் என்ன வித்தியாசம்?"னு கேட்டேன்.

"லோகத்துலே எல்லா ஆம்பிளைங்களும் பாக்க ஒண்ணுப் போலத்தான் இருக்கா? அதுக்காக எல்லோரும் ஆத்துக்காரரா ஆயிடுவாளா?"ன்னு ஆடிட்டர் அம்பி ஒரு போடு போட்டான். நேக்கு கடுகடுன்னு ஆயிடுத்து. அசட்டு அம்பி எப்பவும் இப்படி விவகாரமாத்தான் பேசுவான். ஆனால், அப்படி பேசினால்தான் மனசுல ஒறைக்கறது.

"அம்பி, இதை என் அக்கா பிள்ளையிடம் கொடுத்தால், நாளைக்கு ஒண்ணுன்னா ஓடி வந்து உதவமாட்டானா?"ன்னு கேட்டேன்.

அதுக்கு அவன் சொன்னான், "மாமி, மனுஷாகிட்டே நன்றி எதிர்பார்க்கிறதை மறந்துடுங்கோ. நாளைக்கு பிரயோஜனப்படணும்னு இந்தச் சீட்டை வேறு யாருக்காவது தர்றதுக்கும், இதைப் பணமா மாத்தி பேங்கிலே போட்டு வைக்கிறதுக்கும் ஒரே ஒரு வித்தியாசம்தான். பேங்கிலே போட்ட பணம் திரும்ப வரும். மனுஷாகிட்டேத் தந்தது திரும்ப வரது கஷ்டம். சீட்டுப் பணத்திலே பிடிப்பு இருக்கிறவரைக்கும் இப்படித்தான் தோணும். பிடிப்பு இல்லைன்னா கிழிச்சுப் போட மனசு தயங்காது"ன்னான். அவன் சொன்னதுல என்ன தப்பு?



உடனேப் பிடியை விட்டேன். அந்தச் சீட்டை எடுத்து பகவானையும் என் ஆத்துக்காரரையும் நெனச்சுண்டு கிழிச்சுப் போட்டேன். சொன்னா நம்பமாட்டேள், அந்தச் சீட்டைக் கிழிச்சுப் போட்டதுலே உள்ளுக்குள்ளே பெரிய பாரம் விலகினாப்லே இருந்தது.

லட்ச ரூபாய் சீட்டைக் கிழிச்சுப் போட்டப்புறம் லட்ச ரூபாய் சம்பாதிச்ச மாதிரி சந்தோஷம் வந்தது. இவருக்கு ஒரே சந்தோஷம். மிதிலைலே மொதமொதலே ராமர் சீதையைப் பார்த்தாராமே, அந்த மாதிரி என்னை ஒரு பார்வை பார்த்தார். நேக்கு ஒரே வெட்கமாப் போயிடுத்து. அதுக்கப்புறம் நானும் அதை மறந்துட்டேன். அவரும் அதை மறந்துட்டார்.

கொஞ்ச நாளைக்கு முன்னாலே ஆத்துக்கு நாலைஞ்சு வண்டியிலே பெரிய பெரிய அதிகாரிகளும், போலீஸ்காராளும் வந்தா. எங்க ஆத்தை சோதனை போடணும்னா. நேக்கு திக்குன்னு ஆயிடுத்து. சோதனை போட்டு என்ன கிடைக்கப் போறது? கிழிஞ்ச வேஷ்டியும், ஓட்டைப் பாத்திரங்களும்தான் கிடைக்கும். எங்ககிட்டே ஒண்ணுமில்லே. அதிலே ஒரு அவமானமும் இல்ல. ஆனா, அது மத்தவாளுக்கு தெரிஞ்சா அவமானமா இருக்கே!

"எதுக்கு சோதனை?"ன்னு இவர் சிரிச்சுண்டே கேட்டார்.

"போன மாசம் பத்மனாப சுவாமி கோவில் நிலவறையை திறக்கறச்சே ஆயிரக்கணக்கான கோடி மதிப்புள்ள பொக்கிஷம் கிடைச்சது. அங்க இருந்த கணக்குப் புஸ்தகத்துலே நிறைய விவரங்கள் இருக்கு. நூறு வருஷத்திற்கு முன்னே அந்த கோவில் கும்பாபிஷேகத்தச்சே பெரிய தடங்கல் வந்ததாம். அப்போ உம்ம பாட்டனாரோட தோப்பனார்தான் யாகமெல்லாம் நடத்தி அசுபத்தை சுபமாக மாத்தினாராம். திருவிதாங்கூர் மகாராஜா அதுக்கு சன்மானமா ஒரு பொட்டி நிறைய தங்கக்காசு தந்தாராம். அது இருக்கான்னு பாக்கணும்"னா.

இவர் திகைச்சு போயிட்டார். "இதோ பாருங்கோ, பரண்லே

பழங்கால பூட்டு போட்ட ஒரு பொட்டி இருக்கு. என் தோப்பனார் அதைத் திறந்ததே இல்லே. நானும் அதைத் திறந்ததே இல்லே" அப்படின்னார்.

உடனே வந்தவா அந்தப் பொட்டியை பரணிலிருந்து இறக்கி பூட்டை உடைச்சுத் திறந்தா! என்னன்னு சொல்ல! பொட்டியிலே அரிசிமணி குவிச்சு வச்சாப்பிலே தங்கக்காசு ஜொலிக்கறது. மகாராஜா ஆத்து தங்கமாச்சே! பசும்பொன் நிறம்னா அதுதான் பசும்பொன் நிறம்.

எல்லோரும் கூடி ஏதேதோ பேசினா. இவர்கிட்டே கையெழுத்து வாங்கிண்டா. எங்கிட்டே கைநாட்டு வாங்கிண்டா. பொட்டியை எடுத்துண்டு போயிட்டா. 'இதுவும் போச்சே!'னு இவர்கிட்டே சொன்னேன். 'இல்லேடி அசடு. தங்கக்காசைச் சர்க்கார் வைச்சுண்டு அதுக்கு ஈடா பணமா தருவா'ன்னார்.

நான் பயந்துண்டே கேட்டேன், ''அந்தப் பணத்தை வாங்கிக்கலாமோ?"

''அசடே, நான் பணம் வாங்கவே கூடாதுன்னு எப்போ சொன்னேன்? யார்கிட்டேயும் பணம் கேட்கக்கூடாது, ஆசைப்படக்கூடாதுன்னுதான் சொன்னேன். தெய்வக் காரியம் பண்ணறவாள ராஜாக்கள் ஆதரிக்கிறது வேதகாலம் முதல் இருக்கிற வழக்கம்தானே. நாமே ஞானத்த விலை பேசுறது வேற, மத்தவா அதோட பெருமையப் புரிஞ்சுண்டு காணிக்கையா தர்றத வாங்கிக்கிறது வேற. சர்க்கார் கோடிக்கணக்கில பணம் தரும்னு சொல்றா. எல்லாத்தையும் உன் பேர்லதான் பேங்கில போடச் சொல்லி இருக்கேன்"ன்னார் என் ஆத்துக்காரர்.

நிம்மதி ஆயிடுத்து. ஆனா, ஒண்ணு, பணம் வேண்டாம்னு இவர் சொல்லியிருந்தாலும் நான் சந்தோஷமாத்தான் ஏத்துண்டிருப்பேன்.



சித்த நேரம் கழிச்சு இவர் சொன்னார், "லாட்டரி சீட்டுப் பத்தி நீ பேசினச்சே நேக்கு உன்மேல வருத்தம் வந்தது என்னமோ வாஸ்தவந்தான். அப்புறம் நிதானமா யோசிச்சேன். நீ மதர்னு சொன்னதாலே ஸ்ரீ அரவிந்தரையும் வாசிச்சேன். அகம், புறம்னு ஓயாம பேசுறேனே, அந்த அகத்திலே இருக்கிறது புறத்திலேயும் இருந்தாத்தானே அகத்துல இருப்பது உண்மைனு தோண ஆரம்பிச்சுடுத்து. நம்ம பெரியவா பரம்பரையா கொடுத்து எனக்கும் வந்த ஞானம் அத்தனையும் சொக்கத்தங்கம். அந்த ஞானத்தங்கத்துக்கு ஈடா புறத்திலேயும் பரண்ல தங்கம் இருந்தது. நான்தான் பணம்னாலே தப்புன்னு கண்ணை மூடிண்டு இருந்துட்டேன். நீ லாட்டரி பத்தி கேட்டப்பத்தான் என் கண் திறந்தது. நீ அசடு இல்லேடி. அசத்து! இதுவரை இல்லாததைக்கூட பொம்மனாட்டியாலே உருவாக்க முடியும்!" இதே போல இவர் பிரியமா பேசிண்டே போனார். நேக்கு ஒண்ணும் புரியலே.

இப்ப என் கவலையே வேற. ரொம்ப நாளா கழுத்தில் நீலக்கல் அட்டிகை போட்டுக்கணும்னு ஆசை. எதுத்தாத்து பங்கஜமோ நேக்கு மரகதப்பச்சைதான் எடுப்பா இருக்கும்னு சொல்றா. நான் நீலக்கல் போடறதா, மரகதப்பச்சை போடறதா? நேக்கு ஒண்ணும் புரியலையே!

நான் என்ன செய்யட்டும், சொல்லுங்கோ?

*சுபம்.*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***தாகம் எடுக்கும் பொழுது தண்ணீர் சாப்பிடுவது போல் பிரச்சனை எழுந்தால் அன்னையை நினைக்கிறோம். மூச்சு விடுவது போல் அன்னை நினைவு தேவை.***

# அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## 5. அன்னையின் அருளும் பொருளும்

இறைவனின் கடைக்கண் பார்வையால் தானாகவே வந்து மனித வாழ்வில் செயல்படுவது அருள். உடல் உழைப்பால் பலனாகப் பெறுவது பொருள்.

பரம்பொருளின் அருளுக்கும், பாமரனின் பொருளுக்கும் தொடர்பு இருக்கின்றதா? இருப்பின் அன்னை வழிபாடு அத்தொடர்பை எப்படி ஏற்படுத்துகின்றது? இக்கருத்தை விளக்குவதுதான் கட்டுரையின் நோக்கம்.

உழைப்பாளிக்கு உரியது வெற்றி. வெற்றியின் பலனாகக் கிடைப்பது பொருள். உழைப்பாளியால் முடிந்ததெல்லாம் உழைப்பே. அவன் தன்னைப் பொறுத்தவரையில் தளராது உழைக்க முடியும். அதன் அளவுக்கேற்ப அவன் ஊதியத்தைப் பெற முடியும்.

உடலால் உழைத்துப் பெறும் பெரும்பலன் உடலைக் காப்பாற்றும். உடலுக்குத் திடம் உண்டு. ஆனால் திறன் இல்லை. திடமான உடல், கடினமான உழைப்புக்கு உறுதுணையாக அமையும். அதன் வழியாகப் பெறும் பலன் அளவற்றதாக இருக்க முடியாது. அது உழைப்பின் அளவுக்கு ஏற்பவே இருக்கும். அதோடும், உடல் உழைப்பை மட்டுமே கொண்டவர்களுக்கு அவர்களைப் போலவே உடல் உழைப்பைக் கொண்ட பலரைக் கட்டியாளும் திறமை இருப்பது இல்லை. உணர்வு நிறைந்தவர்களுக்கே அத்திறன் அமையும்.

உடல் உழைப்பை மட்டுமே அளிக்க வல்லவர்களுக்கு உணவை ஈட்டும் திறன் ஒன்று மட்டுமே இருக்கும். அவர்களுக்கு உணவே



உயிர். உணவு கிடைக்கும் இடங்களையே அவர்கள் உயிராகக் கருதுவார்கள். உழைப்பை நல்கும் பலரை ஆளும் திறன் மிகுந்தவர்களுக்குக் கிடைக்கும் பலன் பன்மடங்கு அதிகமாக இருக்கும். 'உயிருக்கு உயிராக' இருக்கும் ஆற்றல் படைத்தவர்கள் அவர்கள். அதன் காரணமாகப் பலருடைய உழைப்பைக் கட்டியாளும் அவர்கள் பெறக்கூடிய பலன், பலர் பெறக்கூடிய பலனுக்குச் சமமானதாக இருக்கும்.

புத்தியில் உதிப்பது அறிவு. அறிவார்ந்த ஒருவனுக்கு, உணர்ச்சி உடையவன் கட்டுப்படுவான். அதனால் உணர்ச்சியுடைய தலைவனின் பொருளீட்டும் திறன், பெரும்பாலான சமயங்களில் அறிவுடைய ஒருவனுக்குக் கட்டுப்படும்.

அறிவின் கூறுகள் பல. கருத்துகளைச் சேகரிக்கும் திறன் படைத்தது ஒன்று; நுட்பமான விஷயங்களை உணரும் நுண்ணறிவு இன்னொன்று; செய்திகளைச் சேகரம் செய்வது மற்றொன்று; அனுபவச் சாரங்களைத் திரட்டுவது வேறொன்று; ஆலோசனைக்கு உரியது பிறிதொன்று; இவ்வாறாக அறிவு பல வகைகளில் இருப்பினும், நாம் இங்கே குறிப்பாகக் கருதுவது வேறொரு வகையான அறிவை. பொருளீட்டும் திறனுடைய உழைப்பு மிகுந்தவர்களை ஆளும் திறமை படைத்தவர்களின் அறிவையே இக்கட்டுரையில் குறிப்பாகக் கொண்டு விளக்க முற்படுகிறேன்.

உழைப்புக்கு உட்பட்டது பொருள். உணர்ச்சியுள்ள தலைவனுக்கு உழைப்பை மட்டுமே கொண்டுள்ள பலர் உட்படுகின்றனர். அத்தகைய தலைவனுக்கு அறிவின் திறன் முக்கியமான நேரங்களில் தேவைப்படுகின்றது. எந்த அறிவுக்கு அவன் தன்னை உட்படுத்திக்கொள்கின்றானோ, அந்த அறிவுக்கு அடிப்படையான பொருள் உட்பட்டது (பொருள் - உழைப்பு, தலைவன் - அறிவு). அந்த அறிவுடைய ஒருவன், பொருளீட்ட உழைக்க வேண்டியதில்லை; உழைப்பவர்களை மேய்க்க வேண்டியதும் இல்லை.

ஏனெனில் மேய்ப்பவர்களை ஆளும் திறன் அவன் அறிவுக்குண்டு.

ஆன்மீக அடிப்படையில் புத்தியின் செயலை, 'ஆன்மீக வெளிப்பாடு' என்பார்கள். ஆன்மா தன் திறனை மனத்தின் மூலம் வெளிப்படுத்தும்பொழுது, அது புத்தியைக் கருவியாகக் கொள்கிறது; அதே முறையில், உணர்வு 'புத்தியின் வெளிப்பாடு' எனவும், செயல் (உழைப்பு) 'உணர்ச்சியின் வெளிப்பாடு' எனவும் கருதப்படுகின்றன. வேறு வகையில் சொல்லும்பொழுது, திறமை ஏற்படும் வரையில் உடல் உழைப்பு தேவைப்படுகிறது. அதற்கு அடுத்தக் கட்டமான உழைப்பவரைக் கட்டியாளும் திறமை ஏற்பட்டபின், உழைப்பு தேவையில்லை. அறிவு உதயமாகும் வரை ஆளும் திறன் தேவை. அறிவு ஏற்பட்டபின், அத்திறனுக்கு வேலையில்லை. அதாவது, உழைப்பின் சாரம் திறன்; திறனின் சாரம் அறிவு; அறிவின் சிகரம் ஆன்ம ஞானம். இந்த நீண்ட விளக்கத்தின் சுருக்கம் இது: ஆன்ம ஞானத்திற்குப் பொருள் அடக்கம். ஆன்ம ஞானம் பெற்ற ஒருவனுக்கு பொருள் ஈட்டுவது எளிது.

பொருளையும், வாழ்வையும், உடலையும் முற்றுமாகப் புறக்கணிப்பது மரபு வழி வந்த நம் ஆன்மீகம். அது தவம், யோகம், சன்னியாசம் ஆகிய மார்க்கங்களைக் காட்டி அப்புறக்கணிப்பு வேலையைச் செய்கிறது. ஆனால் 'வாழ்வனைத்தும் யோகம்' (All Life is Yoga) என்பது அன்னையின் வழி.

அன்னை பொருளையோ, வாழ்வையோ, உடலையோ புறக்கணிக்கவில்லை. பொய்யால் வந்த பொருளையும், பொய்யின் திறத்தால் விளைந்த வாழ்வையும், உடலில் உள்ள இருளையும் மட்டுமே புறக்கணிக்கின்றார் அன்னை. பொருளைப் பொய்யால் ஈட்டலாம்; மெய்யால் பெருக்கலாம். பொய்யால் பொருளீட்டத் திறமையும், உழைப்பும் தேவை. மெய்யால் பொருளீட்டத் திறமை, உழைப்பு ஆகியவற்றுடன் வாய்மை நிறைந்த நேர்மையும் தேவை. நேர்மையின் திறமையால் ஈட்டப்பட்ட பொருளுக்கு உரியவன்



இறைவன். பொய்யின் ஜாலங்களால் ஈட்டப்பட்டப் பொருளுக்குத் தலைவன் அசுரன்.

நேர்மையின் திறமையால் ஈட்டப்பட்டப் பொருள் இறை வழிபாட்டுக்கு அளவுகோல். இதுவே அன்னையின் வழிக்குத் திறவுகோலும் ஆகும்.

அன்னையின் வழியில் அழைத்துச் செல்வதற்கு ஒரு துணை வேண்டும் அன்றோ? அதுவே 'அன்னையை வழிபடுதல்' என்ற பெருந்துணை. 'அன்னையை வழிபடுதல்' என்பது என்ன? அன்னையின் தெய்வாம்சத்தை உணர்ந்து, அவரை ஆன்மாவில் தெய்வமாகப் பிரதிஷ்டை செய்துகொள்வது. உடலின் உழைப்பையும், உயிரின் உணர்ச்சியையும், அறிவின் திறத்தையும் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆன்மீக ஒளிக்கு உட்படுத்திச் சமர்ப்பணம் செய்துகொள்வது. இதுவே அன்னை வழிபாடு.

அன்னை, நெஞ்சில் பிரதிஷ்டை செய்யப்படுவதால், விளக்கம் பெற்ற ஆன்மா அறிவில் ஜோதியாகவும், வாழ்க்கையில் வெற்றியாகவும், உடல் உழைப்பின் சிறப்பாகவும் வெளிப்படுகின்றது. எனவே நெஞ்சிலுள்ள ஆன்ம ஒளிக்கு, பொருளீட்டும் உழைப்பு கட்டுப்படுகின்றது. அன்னையின் அவ்வொளி நெஞ்சில் ஏற்பட்டபின், பொருள் அவனைத் தேடி வரும். அவன் பொருளுக்கு அதிபதியாகின்றான். அப்பொருள் அருளால் விளைவது.

அது அருளால் வரும் பொருளாக இருப்பதாலே, அதைச் சத்தியத்தால் மட்டுமே ஈட்ட முடியும். பொய்யோ, பொய் நிறைந்த புரட்டோ அருகில் வந்தால், அப்பொருள் மாயமாய் மறைந்துபோகும். வாய்மையாலும், வாய்மையின் நேர்மையாலும், நேர்மையின் திறத்தாலும் மட்டுமே ஈட்டக்கூடியது அப்பொருள்.

'சத்தியம்' என்பது உள்ளது. இல்லாதது பொய்; உள்ளதே உண்மை. 'உண்மையே சத்தியம்' என்றாலும், சத்தியத்திற்கு அநேக

வடிவங்கள் உள்ளன; ஆயிரம் உருவங்கள் இருக்கின்றன.

ஒவ்வொரு செயலுக்கும், உணர்வுக்கும், எண்ணத்திற்கும் இரு வடிவங்கள் உள்ளன. ஒன்று, சத்தியத்தின் வடிவம்; மற்றொன்று, பொய்யின் வடிவம். 'எண்ணம்' என்பது கருவி. இது சத்தியத்திற்கும் பயன்படும்; பொய்க்கும் பயன்படும். 'விருப்பம்' என்பது உணர்வு. விருப்பம் உயர்ந்த இலட்சியத்திற்குப் பயன்படுவதைப் போல, அதற்கு எதிரான காரியத்திற்கும் பயன்படும். பல்வேறு நிலைகளில் இந்த இரு வடிவங்களும் தெளிவாகத் தெரியும். பொறுமையை 'சத்தியத்தின் வடிவம்' என்றால், எரிச்சலை 'பொய்யின் வடிவம்' என்று புரிந்து கொள்வதற்குப் பேரறிவு தேவை இல்லை.

எனவே, அறிவு, பொறுமை, ஆற்றல், இன்சொல், கூர்ந்தமதி (அறிவுக் கூர்மை), மெய்ப்பொருள் காணும் திட்பம், அடக்கம், நெறி, கற்பு, திண்மை (வலிமை), சாதுர்யம் (நாகரிகம்), சமயோசிதம், இனிய பேச்சு, பிறர் மனம் அறிய முற்படுதல் போன்ற ஆயிரம் நல்ல குணங்களை, நல்ல பழக்க வழக்கங்களைச் 'சத்தியத்தின் கூறுகள்' எனலாம்.

அதே போல சிலவற்றிற்கு எதிரான குணங்களைப் பழக்கவழக்கங்களைப் 'பொய்யின் பிரதிநிதிகள்' எனலாம். நாம் கடையில் ஒரு சாமான் வாங்கும் போதும், பஸ்ஸில் டிக்கெட் வாங்கும்போதும், ரூபாய் 3 கோடி கடனை சாங்ஷன் செய்யும் உயர் அதிகாரியானாலும், அதிர முழங்கும் மேடைப் பேச்சாளரானாலும், அழும் குழந்தையைக் குளிப்பாட்டும் தாயானாலும், ஒவ்வொரு செயலிலும், நிலையிலும் எது சரி, எது தவறு, எது சத்தியம், எது பொய் என்பது நமக்குத் தெளிவாகத் தெரியும். எனவே, அதற்கு விளக்கம் தேவையில்லை. கடமைகளைப் பொறுப்புடன், நல்ல நோக்குடன் நிறைவேற்றும் எல்லா நல்ல பழக்கங்களையும் சத்தியத்தின் பிரதிநிதிகளாகக் கொள்ளலாம். அவற்றிற்கு எதிரான எல்லாவற்றையும் பொய்யின் பிரதிநிதிகளாகத் தள்ளலாம்.



ஒருவர் இக்கருத்தை ஏற்றுச் செயல்பட வேண்டுமானால், அவர் செய்ய வேண்டியவை என்ன? அவை கீழே தரப்படுகின்றன:

1. அன்னையைத் தெய்வமாக உணர்ந்து, ஆன்மாவில் பிரதிஷ்டை செய்து, மனத்திலும், சொல்லிலும், செயலிலும் அன்னை வழிகளை மேற்கொண்டு, வாழ்க்கையை அன்னைக்குச் சமர்ப்பணம் செய்து வாழ எடுக்கும் முடிவு, வாழ்வின் முழுப் பெருமுடிவாக இருக்க வேண்டும்.
2. தம் கடமைகள் என்னவென்று பிறரைக் கேட்காமல் தாமே அறிந்து, உணர்ந்து, அவற்றை முழுமையாக ஆற்ற அரும்பாடுபடுதல் வேண்டும்.
3. தம் வயதிற்கும், தொழிலுக்கும், நிலைமைக்கும் (அந்தஸ்துக்கும்) உரிய திறமைகள் குறைவாக இருந்தால், அவற்றைப் பூரணமாகப் பெற முயன்று வெற்றி பெற வேண்டும்.
4. பொய்யின் திறமையால் கிடைக்கும் பலன்களை அறவே விலக்கி, தம் காரியங்களையும், கடமைகளையும் நேர்மையின் திறத்தால் பூர்த்தி செய்ய முழுமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.
5. இன்றைய வாழ்வில் கடமையும், திறமையும் பூரணம் அடைந்தபின், மனச்சாட்சிக்குப் புறம்பான காரியம் ஒன்றுகூட இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
6. இன்று கடமை, திறமை, மனச்சாட்சி ஆகியன பூர்த்தியானது போல், நம் கடந்த கால வாழ்வை ஆதி முதல் கவனித்து, அது எவ்வாறிருந்தது என்று சிந்தித்து, சோதித்து, குறையுள்ள இடங்களை உணர்வால் நிறைவு செய்து, கடந்தகாலப் பாக்கியைப் பூர்த்தி செய்ய வேண்டும்.
7. வீடு, சுற்றுப்புறம் ஆகியவற்றைச் சுத்தத்திற்கு எடுத்துக்காட்டாக வைத்துக்கொள்ள வேண்டும்.
8. பொதுவாக ஆத்ம சமர்ப்பணத்தை முழுமையாகச் செய்தல் வேண்டும். எந்த நினைவு வருமுன்னும், எந்தச் செயலைச்

செய்யும் முன்பும் அன்னையை நினைத்துக்கொள்ள வேண்டும்.

'பணம்' என்ற நோக்கில் பார்க்கும்பொழுது, அதைக் குறைவறப் பெற இன்னும் சிலவற்றைக் கைக்கொள்ள வேண்டும். பொருளுக்கு அடிப்படை உழைப்பு. ஆதலால், உழைப்புக்கு எதிரான சோம்பேறித்தனத்திற்கு வீட்டில் இடம் கொடுக்கக்கூடாது. செய்த செலவுக்கு விவரமான கணக்கை அன்றாடம் எழுத வேண்டும். எவ்வளவு சிறிய தொகையானாலும், நாம் பட்ட கடன்கள் எவ்வளவு நாள்பட்டதானாலும், அவற்றைக் குறையின்றித் தீர்க்க வேண்டும். தாழ்ந்த, மெதுவான குரலில் பேசுவதற்கும், செல்வத்திற்கும் தொடர்புள்ளதால், குரலைத் தாழ்த்தியும், சொற்களின் அளவைக் குறைத்தும் பேச வேண்டும். உடைந்த பொருள்கள், பழுதுபட்ட மிஷின்கள், செல்வநாயகியான லட்சுமி நம் இல்லத்திற்கு வரத் தடையானவை என்பதால், எவ்வளவு சிறிய பொருளானாலும் அதை உடனடியாகப் பழுது பார்த்துவிட வேண்டும்.

அன்னை நாகலிங்கப் பூவை 'செல்வ வளம்' (Prosperity flower) என்கின்றார். சிவப்பு நிற நாகலிங்கப் பூவை 'செல்வ வளம்' என்றும், வெண்மை நிற நாகலிங்கப் பூவை 'தன்னலமற்ற செல்வ வளம்' (Unselfish Prosperity) என்றும் அன்னை குறிப்பிடுகின்றார்.

அன்னைக்கு நாகலிங்கப் பூவைச் சார்த்தி வணங்குதல் நலம். அது அருள் நலத்தையும், அளவற்ற பொருள் நலத்தையும் தரவல்லது.

*தொடரும்....*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***குறை மூலத்தின் இலட்சியம்.***



# Sri Aurobindo and the Tradition

## ஸ்ரீ அரவிந்தரும், மரபும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

26. Tradition knows God in the descent.
**Sri Aurobindo speaks of God in the ascent.**
மரபு படைப்பிலுள்ள கடவுளை அறியும்.
**ஸ்ரீ அரவிந்தர் பரிணாமத்திலுள்ள கடவுளைப் பற்றிப் பேசுகிறார்.**

27. Tradition believes in pralaya when Ishwara dissolves.
**To Him, there is no pralaya, Ishwara reveals, says He, the Marvel of Supermind.**
ஈஸ்வரன் கரையும் போது பிரளயம் உருவாகிறது என மரபு நம்புகிறது.
**பிரளயம் என்பதே இல்லை, ஈஸ்வரன் சத்திய ஜீவியத்தின் அற்புதத்தை வெளிப்படுத்துகிறான் என்று ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார்.**

28. Tradition speaks of the Unity of the One.
**Sri Aurobindo tells us of the Unity in multiplicity also.**
மரபு ஒன்றின் ஐக்கியத்தைப் பற்றிப் பேசுகிறது.
**ஸ்ரீ அரவிந்தர் பலவற்றின் ஐக்கியத்தைப் பற்றியும் நமக்குக் கூறுகிறார்.**

29. Jivatma is not eternal for the tradition.
**To Him, Jivatma is Paramatma, the Individual is the Eternal.**
ஜீவாத்மா அழியக்கூடியது என மரபு கூறுகிறது.
**ஜீவாத்மாவே பரமாத்மா, தனியன் அழிவற்றவன் என ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார்.**

30. Tradition divides life as Divine and undivine.
**To Him, there is nothing Undivine, all are Divine.**
மரபு வாழ்வை இறைத்தன்மை உடையது, இறைத்தன்மை அற்றது எனப் பிரிக்கிறது.
**இறைத்தன்மை அற்றது என எதுவுமே இல்லை, அனைத்தும் இறைவனே என ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார்.**

31. Tradition searched for physical immortality.
**Sri Aurobindo leads Man to spiritual immortality.**
மரபு ஜடத்தின் அமரத்துவத்தைத் தேடியது.
**ஸ்ரீ அரவிந்தர் மனிதனை ஆன்மீக அமரத்துவத்திற்கு இட்டுச் செல்கிறார்.**

32. Moksha can be attained even if ego survives partly or fully.
**Sri Aurobindo's yoga cannot be begun if ego is not dissolved.**
அகந்தை முழுமையாகவோ, சிறிதளவோ இருந்தாலும்கூட மோட்சத்தை அடையலாம் என மரபு கூறுகிறது.
**அகந்தையைக் கரைக்காமல் ஸ்ரீ அரவிந்தரின் யோகத்தை ஆரம்பிக்க முடியாது.**

33. Selfishness is no bar for the traditional goal.
**Self-giving is indispensable for His yoga.**
மரபிற்குச் சுயநலம் தடையில்லை.
**ஸ்ரீ அரவிந்தரின் யோகத்தில் தன்னைத் தருதல் தவிர்க்க முடியாதது.**

34. The traditional yoga can be fulfilled from any part of the being.
**Integral Yoga can only be done from all the parts of Man's being.**
மரபு வழி யோகத்தை ஜீவனின் எப்பகுதி மூலமும் பூர்த்தி செய்ய முடியும்.
**பூரண யோகத்தை மனித ஜீவனின் அனைத்துப் பகுதிகளின் மூலமும் செய்ய வேண்டும்.**



35. All traditional yogas are of the surface Mind.
**Integral Yoga is done from the subliminal which ultimately becomes the surface.**
மரபு வழி யோகங்கள் அனைத்துமே மேல்மனத்தில் செய்யப்படுபவை.
**பூரண யோகம் அடிமனத்திலிருந்து செய்யப்பட்டு இறுதியில் அடிமனம் மேல்மனமாகிறது.**

*தொடரும்....*

❋❋❋

**ஜீவிய மணி**

***பிழைக்கத் தெரியாதவனுக்குத் தொழில்.***

***வாழத் தெரியாதவனுக்கு வசதி.***

***வசதியையும், தொழிலையும் விலக்கும் வலிமை மனிதனை தெய்வமாக்கும்.***

# Infinityயினுடைய ஆற்றல் (பாகம் 2)

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

N. அசோகன்

1. நாம் Finiteஆக இருக்கும்பொழுது வெளியிலிருந்து அதிகம் பெற்றுக் கொண்டால்தான் இருப்பதை வளர்க்க முடியும் என்று நமக்குத் தோன்றுகிறது. சம்பளத்திற்கு வேலை செய்பவர்கள் ஸ்தாபனம் தனக்கு increment போட்டுக் கொடுத்தால்தான் தன்னுடைய வருமானம் வளரும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஊழியர்கள் தனிப்பட்ட முறையில் தனது சிறிய வருமானத்தைப் பெரிதாக்கிக் கொள்ள இப்படி எண்ணுகிறார்கள் என்றால் அதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. ஆனால் பொதுவாக நெடுநாளாக வியாபார நிறுவனங்கள் எல்லாமே வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்றால், விற்கின்ற பொருட்களின் விலையை ஏற்றி அதன் பலனாக வருகின்ற customerகளிடம் அதிக விலையைப் பெற்று அதன் மூலம்தான் தன்னுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும் என்று நம்பிக் கொண்டு இருந்தன. வருடம் 2000 வரை உலகம் எங்கிலும் எல்லா நிலைகளிலும் உள்ள வியாபார நிறுவனங்களிடமும் விலையை ஏற்றித் தான் அதிகம் சம்பாதிக்க முடியும் என்ற கருத்து இருந்தது. பணத்தை ஒரு finite entityஆக நாம் நினைப்பதால் தான் வியாபாரம் செய்யும்போது நாம் இப்படி நடந்து கொள்கிறோம். அதாவது, அடுத்தவரிடமிருந்து அதிகமாகப் பணத்தை வாங்கித்தான் நம்முடைய வருமானத்தை அபிவிருத்தி செய்து கொள்ள முடியும் என்று நம்பி நாம் இதுவரை செயல்பட்டு வந்துள்ளோம்.

   ஆனால் நாம் பணத்தை வேறுவிதமாக அணுகினால் அதனுடைய Infinite அம்சங்கள் நமக்குத் தெரிய வரும். அதாவது, விலையை ஏற்றி அதன் வழியாக அதிகம்



சம்பாதிக்கலாம் என்று முயற்சி செய்யாமல் விலையைக் குறைத்து customerஐ மகிழ்வித்தால் விலையை ஏற்றும்போது கிடைக்கின்ற வருமானத்தைவிட விலையைக் குறைக்கும்போது வழக்கத்திற்கு மாறாக வியாபார நிறுவனங்கள் வருமானங்கள் பெருகுவதைப் பார்க்கலாம். விலையை ஏற்றும் பொழுது customerஇடமிருந்து வியாபார நிறுவனங்கள் பெற்றுக் கொள்ள முயற்சி செய்கின்றன. இது finite அணுகுமுறையாகும். ஆனால் விலையைக் குறைக்கும் பொழுது customerகளுக்கு வியாபார நிறுவனங்கள் self giving செய்கின்றன. Self-giving பணத்தினுடைய infinite அம்சத்தை வெளிக் கொண்டு வந்து அதை அளவு கடந்து வளரச் செய்கிறது. இந்த உண்மையைத் தற்போது உணர்ந்து கொண்டு அதற்கேற்றபடி தன்னுடைய வியாபார அணுகுமுறைகளைப் பல நிறுவனங்கள் மாற்றிக் கொண்டு வருகின்றன. Mobile கம்பெனிகள் வருடம் 2000த்துக்கு முன்னால் per minute chargesஐ அதிகமாக வசூலித்துக் கொண்டிருந்தன. ஆனால் இப்பொழுது local, STD, ISD என்று எல்லாக் கட்டணங்களையும் எல்லா mobile companyகளும் பெருமளவில் குறைத்துவிட்டன என்று தெரிய வருகிறது. கட்டணங்களைக் குறைக்கக் குறைக்க customer base பல மடங்கு அதிகரிப்பதையும் வருமானம் பெருகுவதையும் mobile companyகள் உணருகின்றன. அம்மாதிரியே deposit சேகரிப்பதிலேயே குறியாக இருந்த வங்கிகள் இப்பொழுது அணுகுமுறையை மாற்றிக் கொண்டு எல்லாவிதமான கடன்களையும் கஸ்டமர்களுக்குத் தேடி வந்து கொடுக்க முன்வருகிறார்கள். டெபாஸிட் சேகரம் செய்யும் வளர்ச்சியில் கிடைப்பதைவிட வாடிக்கையாளர்களுக்குக் கடன் கொடுப்பதன் மூலம் அதிக வருமானம் வங்கிகளுக்குக் கிடைப்பதை வங்கிகள் இப்பொழுது உணர்கின்றன. ஆக மேற்சொன்னவற்றை

வைத்துப் பார்க்கும் பொழுது பணத்தை finiteஆக நினைத்து நாம் பெற்றுக் கொள்வதிலேயே குறியாக இருந்தால் நம்முடைய வருமான வளர்ச்சியும் finiteஆகத்தான் இருக்கும். ஆனால் இப்படி அதை finiteஆக நினைக்காமல் infiniteஆகப் பாவித்து வருமானத்தை வளர்க்க முயன்றால் infinite வருமான வளர்ச்சியை நம் வாழ்க்கையிலும் பார்க்கலாம் என்று தெரிகிறது.

2. Finiteஆக இருக்கும்பொழுது சிந்தனை செய்வதால் அறிவு வளர்கிறது. மாறாக infiniteஆக இருக்கும்பொழுது மௌனத்தால் அறிவு வளர்கிறது.

உதாரணமாக சாதாரண எழுத்தாளர்கள், கவிஞர்கள் மற்றும் படைப்பாளிகள் இவர்கள் எல்லோருமே தீவிரமாக சிந்தனை செய்துதான் புதிய புதிய விஷயங்களைக் கற்பனையில் உருவாக்கித் தம்முடைய படைப்புகளை உலகிற்கு அளிப்பார்கள். ஆனால் இப்படிச் சிந்தனையையும், கற்பனையையும் வலியுறுத்தி உருவாக்கும் படைப்புகளைவிட மௌனத்திலிருந்து எழும் படைப்புகள் பல மடங்கு சிறப்பானவைகளாக இருக்கும். பகவான் எழுதியுள்ள *ஃலைப் டிவைன், சின்தஸிஸ் ஃஆப் யோகா* மற்றும் *சாவித்திரி* ஆகிய உன்னத படைப்புகளெல்லாம் மற்ற எழுத்தாளர் போல அவர் சிந்தனை செய்து எழுதியவைகளே கிடையாது. மாறாக அவருக்குள் குடி கொண்டிருந்த நிரந்தர மௌனத்தில் பிறந்தவைதாம் இந்தப் படைப்புகளெல்லாம். பேனாவையும், பேப்பரையும் எடுத்துக் கொண்டு எழுத அமர்ந்தார் என்றால் எண்ணங்களும், வாக்கியங்களும் தாமாக ஒன்றன் பின் ஒன்று உதயமாகி வெளிப்பட்டு எழுத்து வடிவம் பெறுமாம். இப்படித்தான் அவர் எழுதினார் என்று அன்றே தன்னுடைய அஜெண்டாவில் அவருடைய எழுத்தாற்றலைப் பற்றி அன்னை குறிப்பிட்டிருக்கிறார்.



3. Finite initiative மூலம் சாதிக்கிறது. ஆனால் இதற்கு நேர் எதிர்மாறாக surrender மற்றும் சமர்ப்பணத்தின் மூலம் Infinite சாதிக்கிறது.

அகந்தையை மையமாக வைத்துச் செயல்படுகின்ற சாதாரண மனிதன் தனக்குப் பிடித்த காரியங்களையும் தனக்கு எது நல்லது என்று தெரிகிறதோ அது சம்பந்தப்பட்ட காரியங்களையும் தானே முனைந்து initiative எடுத்துச் செய்கிறான். இப்படித் தனக்கு வேண்டியதைத் தானே செய்து கொள்ள நினைப்பது finite மனப்பான்மையாகும். இப்படிச் செயல்படும்போது அவரவருடைய சொந்த அறிவாற்றல், மனோபலம் மற்றும் உடலுழைப்பு, பணபலம் இவற்றுக்குண்டான பலன்தான் கிடைக்கிறது. அந்தப் பலன் limitedஆகத்தான் இருக்கும். ஏனென்றால் அகந்தை என்பது ஒரு finite entity தான். ஆனால் அன்னை பக்தர்கள் தங்களுடைய choice, தங்களுடைய இஷ்டம் என்று எல்லாவற்றையும் அன்னையிடம் சமர்ப்பணம் செய்துவிட்டு அன்னையின் திருவுள்ளம் தங்கள் வாழ்க்கையில் செயல்படட்டும் என்று அன்னைக்குச் சுதந்திரத்தை வழங்கும் பொழுது அன்னையினுடைய அருளாற்றல் அன்பர்கள் வாழ்க்கையில் செயல்படத் தொடங்குகிறது. அகந்தையின் பலம் finite என்றால் அன்னையின் அருளின் பலம் infinite ஆகும். அருளினுடைய வரம்பற்ற பலம் அன்பரின் வாழ்க்கையில் வெளிப்படும் பொழுது அவருடைய வருமானம் மற்றும் வாழ்க்கை முன்னேற்றம், மற்றும் கேரியர் accomplishment அவரைப் பொறுத்தவரை ஒரு வரம்பற்ற வளர்ச்சியைக் காண்கின்றன. அதாவது மாதம் 10,000 ரூபாய் வருமானம் கிடைத்தாலே பெரிது என்று நினைப்பவருக்கு மாத வருமானம் இலட்ச ரூபாயாக உயர்கிறது. Clerical cadreல் பணியில் சேர்பவர் அதிவேகத்தில் officer cadreக்கு உயர்கிறார். Working classல் பிறந்து வளர்ந்தவர்

அதிவேகமாக upper class levelக்கு உயர்கிறார். இவையெல்லாம் சாதாரண மனிதனாக இருந்து அன்னை பக்தனாக மாறுபவருக்கு அவரைப் பொறுத்தவரை வரம்பற்ற வளர்ச்சிதான்.

4. Finite பகுத்தறிவை வைத்துச் செயல்படக்கூடியது. Infinite நம்பிக்கையை ஆதாரமாக வைத்துச் செயல்படுகிறது.

மனிதன் தன்னை finiteஆகப் பாவித்துச் செயல்படும் பொழுது அவனுடைய அறிவு தன்னுடைய power of reasonஐ மட்டுமே நம்பிச் செயல்படுகிறது. அப்பட்சத்தில் ஒருவருடைய அறிவுக்கு என்ன புரிகிறதோ, எது சாத்தியம் என்று படுகிறதோ, அதுதான் அவருடைய வாழ்க்கையில் கூடி வரும் என்று அவருடைய அறிவு அவரை நம்ப வைக்கிறது. ஒருவருக்கு இருக்கின்ற வாழ்க்கை சூழ்நிலையில் பெரிய மாற்றத்திற்கோ, உயர்விற்கோ வழியில்லை என்று அவருடைய அறிவு சொல்வதை அவர் நம்பினால், அவருடைய வளர்ச்சி அத்துடன் நின்று விடுகிறது. ஆனால் அறிவு சொல்வதை மதிக்காமல் ஆன்மாவினுடைய நம்பிக்கையை வைத்துச் செயல்படும் பொழுது finiteஆக இருக்கின்ற மனிதன் infiniteஆக மாறுகிறான். எந்த வருமானம், எந்தப் பதவி உயர்வு, எந்தச் சமூக உயர்வு ஒருவருக்கு இல்லை என்று அவருடைய அறிவு சொல்கிறதோ அவற்றை எல்லாம் அவருடைய இறை நம்பிக்கை சாத்தியமாக்கும் பொழுதுதான் finiteஆக செயல்பட்ட தன்னுடைய அறிவை இதுவரையிலும் நம்பியது எவ்வளவு பெரிய தவறு என்பதை மனிதன் உணர்கிறான்.

*தொடரும்....*

❃❃❃

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No.238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No.11, 2nd Floor, Grace Apartments, No.177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

## கரண்ட் வாழ்வின் உணர்ச்சிபூர்வமான முனை

Life Response என்பதை வாழ்வின் எதிரொலி எனலாம். எப்படி உடல் உணர்வாலானதோ அதேபோல் வாழ்வு என்பது சமூகத்தின் உணர்ச்சியால் உருவான உடல். வாழ்வு உணர்ச்சி முனைகளாலான பரந்த பரப்பு. அது ஊர் முழுவதும் பரவியுள்ளது. ஆழம் அதிகமானால் உலகம் முழுவதும் பரவும். ஒவ்வொரு புள்ளியும் அடுத்த புள்ளியுடன் ஜீவனுள்ள தொடர்புள்ளது. உலகத்துக் கம்ப்யூட்டர்கள் இன்டர்நெட்டில் அது போலிணைந்து இருப்பதால் ஒரு கம்ப்யூட்டர் மூலம் உலகில் எந்தக் கம்ப்யூட்டரையும் தொடலாம். அடுத்த ஜாதியில் திருமணம் செய்வது பரவி வரும் காலமிது. இதை ஆசையால் செய்வது வழக்கம். அதனால் உள்ளூரப் பெருமைப்படுவதுண்டு. உலகில் வாழவேண்டுமென்பதால் உலகம் பகிரங்கமாக ஏற்காததால் அதற்கு வெட்கப்படுகிறார்கள். இவ்விரு காரணங்களால் கலப்புத் திருமணம் காதல் திருமணமானாலும், மனத்தின் ஆழத்தில் ஏற்காத உணர்வாய் உறைவதாகும். உங்கள் திருமணம் கலப்புத் திருமணமா என அனைவரும் அறிந்த செய்தியை ஒரு பெண்ணைத் திருமணமான 15 ஆண்டிற்குப் பின் கேட்டவுடன் கரண்ட் நின்றது. அது தமிழ்நாடு முழுவதும் நின்றது. நின்ற கரண்ட் 20 மணி நேரம் வரவில்லை. கலப்புத் திருமணமாகி ஆண்டு 15 ஆனாலும் மனம் அதைக் கருதும் பொழுது ஆழத்தில் அசைக்க முடியாத அதிர்ச்சியாவதை தமிழ்நாடு முழுவதும் 20 மணி நேரம் நின்றது குறிக்கிறது.

❋❋❋

# திருடு

தினசரி பால் பாக்கட் வைக்கும் இடத்தில் இன்று பாக்கட் இல்லை. மறுநாளுமில்லை. தொடர்ந்து ஐந்து நாளில்லை. பால்காரனைப் பார்த்துக் கேட்க வேண்டும். இப்படியே போனால் என்ன ஆவது? ஐந்து நாட்களாய் உழலும் மனம் நினைத்தவை பல. செய்தவை வேறு. நெடுநாள் அன்பராயிருந்தும் பிரார்த்தனை செய்யத் தோன்றவில்லை. சமர்ப்பணம் மறந்துவிட்டது. சமர்ப்பணம் மறக்காத மனம் அன்பருக்குரிய மனம். அன்னையே முக்கிய நேரத்தில் அடியோடு மறந்துவிடும் பொழுது சமர்ப்பணமும், பிரார்த்தனையும் என்ன செய்யும்? ஐந்தாம் நாள் பிரார்த்தனை தோன்றியது. பிரார்த்தனை செய்யும்போது அழைப்பு மணி அடித்தது. பால்காரன் நிற்கிறான். அவனுக்கு அடுத்த வீடுகளிலிருந்து செய்தி போய் அவன் திருடனைக் கையும் களவுமாகப் பிடித்துத் திருடிய பாலுக்கெல்லாம் அவனிடம் பணம் வாங்கி வாடிக்கைகாரர்களிடம் கொடுத்து சமாதானம் செய்தான். அன்னை சூழல் பிரச்சனையைத் தீர்க்கும் என அறிவோம். திருடனைப் பிடிக்கும் என அறிவோம். திருடன் மனத்தையும் செயலையும் மாற்றும் என்பது தெரிந்தாலும் தோன்றுவதில்லை. நமக்குத் திருடு, திருடனைப் பற்றிக் கவலையில்லை. கவலை நஷ்டத்திற்கு, பாலுக்கு. பலனைவிட முறையை அறிவது முக்கியம். மேற்சொன்னது முறை. முறையைக் கடந்த மூலம் முக்கியம். மூலம் இயற்கையில் செயல்படும் பிரம்மம். பிரம்மம் இயற்கையில் பரிணாம சக்தியாகச் செயல்படுவது அன்னை சக்தி. அதன் அவதார ரூபம் சத்திய ஜீவிய மகா சக்தி.

❋❋❋

Vol. II Issue 7 October 2012
Malarndha Jeeviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/2012-2014
Regd. with the Registrar of Newspaper for India vide Registration No. PON TAM/2011/36935
Price: Rs.5/- WPP No.45/09-11

**புதிய வெளியீடுகள்**

**ESSAYS ON ACCOMPLISHMENT** ரூ.150/-
N.Asokan

**கர்மயோகியின்**

**அன்னையின் ஆன்மீகப்பரிசு** ரூ.100/-

**லைப் டிவைன் - கருத்துகள்** ரூ.100/-

**பரம்பொருள் III** ரூ.200/-

**எங்கள் குடும்பம் (பாகம் 2)** ரூ.250/-

**யோக வாழ்க்கை விளக்கம் IV** ரூ.150/-

**சொசைட்டியின் பிற வெளியீடுகள்**

**லைப் டிவைன் விரிவுரைகள்** ரூ.100/-
*தமிழாக்கம்:* என். அசோகன்

**SATYA JYOTHI** ரூ.200/-
(CONCISE TRUISMS)
N.Asokan

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

**கிடைக்குமிடம்**

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்டா நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆ : (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
23/1, மேற்கு சாலை,
மேற்கு C.I.T. நகர்,
சென்னை - 600 035.
✆ : (044)-24347191

Vol. II Issue 7 October 2012

# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

## அக்டோபர் 2012